8 APR 2004

Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 பங்குனி 26 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஸபர் 17 (08.04.2004) வியாழக்கிழமை இதழ்:190

பளிச்சிடும் வெண்மைக்கு
அன்னா சொட்டு நீலம்
ANNA INDUSTRY-INUVIL
Tele Phone: 2223565

### பாதுகாப்பு உள்ளிட்ட

## முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களை ஜனாதிபதியே வைத்திருக்க முடிவு!

(கொழும்பு)

பாதுகாப்பு, நிதி போன்ற முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களை ஜனாதிபதி சந்திரிகா தமது வசம் வைத்திருக்கத் திட்டமிட்டிருப்பதாக தெரியவருகிறது.

இது தொடர்பாக சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்று நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் -

இன்று அமைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் அமைச்சரவையில் முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களை ஜனாதிபதி சந்திரிகாவே வைத்திருக்கத் திட்டமிட்டுள்ளார்.

தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி கடந்த நவம்பரில் பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்ற ஜனாதிபதி சந்திரிகா, அதைத தொடர்ந்தும் தன்வசம் வைத்திருக்க விரும்பும் அதேவேளை நிதியமைச்சையும் தன் பொறுப்பில் எடுத்துக் கொள்ளத் தீர்மானித்துள்ளார்.

அமைச்சுப் பதவிகளுக்கு பொருத்தமானவர்களை நியமிக்கின்ற அதேவேளை- அந்த அமைச்சுக்களுக்குப் பொருத்தமான செயலாளர்களை நியமிப்பது குறித்து இப்போது ஆரா

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் சமாதான முயற்சிகளில் இந்தியா நேரடியாக பங்களிக்க வேண்டும்

### ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் வலியுறுத்து

இலங்கையில் இடம்பெற்றுவரும் சமாதான முயற்சி தொடர்பில் இந்தியா தனது நேரடியான பங்களிப்பினை வழங்கவேண்டும்.

இவ்வாறு முன்னாள் வெளியுறவு அமைச்சரும், ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் நேற்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

2002 ஆம் ஆண்டு நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன் ஒரு புரிந்துணர்வு ஒப் பந்தம் செய்யப்பட்டு தற்போது வரை நடை முறையில் உள்ளது.

இதில் நோர்வேயின் பங்களிப்பு அனுசரணையே ஒழிய மத்தியஸ்தர் நிலை அல்ல.

முன்னைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் ஆரம்பிக்கப்பட்ட இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான உடன்படிக்கை - தற்போதைய புதிய அரசாங்கத்திலும் தொடரும்.

இந்த ஒத்துழைப்பு தொடர்பான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து முன்னெடுத்துச் செலலப்படும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### புதிய அரசாங்கத்துக்கு நாடாளுமன்றில்

# பெரும்பான்மைப் பலம் இல்லாமையால் அமைச்சரவை நியமனம் இழுபறியில்!

(கொழும்பு)

**பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்திற்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப்பலத்தினை பெற்றுக் கொள்வதில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலையினால், புதிய அமைச்சரவையை அமைப்பதில் இழுபறி நிலை ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.**

**ஏற்கனவே - பிரதமர் ராஜபக்ஷ தலைமையிலான அமைச்சரவை நேற்று பதவியேற்கும் என தெரிவிக்கப்பட்ட போதிலும் அது நடைபெறவில்லை.**

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தனது பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு 8 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு தேவைப்படுவதனால் இதர கட்சிகளுடன் பேச்சுவார்த்தையை நடத்தி வருகிறது.

மலையகத்தில் 8 ஆசனங்களை வென்ற இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர் ஆறுமுகம் தொண்டமானுடன், புதிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவசரப் பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டதாகத் தெரியவருகிறது.

ஹெல உறுமய மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பினர், சந்திரிகாவின் கூட்டணியுடன் இணைந்து ஆட்சியமைக்க மறுத்து வரும் நிலையில், தொழிலாளர் காங்கிரசின் ஆசனங்கள் மிகவும் அவசியமானவையாக கருதப்படுகிறது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஐக்கிய தேசிய முன்னணியின் கீழ் தேர்தலில் போட்டியிட்ட போதும், பிரிந்துசெல்லும் உடன்படிக்கையை கைச்சாத்திட்டே போட்டியிட்டது

## ஜனாதிபதி – ரணில்

### ஐ.ம.சு.முவின் தேசியப் பட்டியல் எம்.பிக்கள் விபரம் வெளியானது!

ஐ.ம.சு.முன்னணியின் சார்பில் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளோரின் விபரங்கள் நேற்று வெளியிடப்பட்டன.

லக்ஸ்மன் கதிர்காமர், பேராசிரியர் விஸ்வவர்ணபால, பேராசிரியர் திஸ்ஸ விதாரண, டி.யு.குணசேகர, ஜே.காஞ்சனா குணவர்த்தன, அன்வர் இஸ்மாயில், ஜனதாஸ பீரிஸ், ராமலிங்கம் சந்திரசேகரன், டி.சி.வீரசேகர, பிலிப்குமார லியனகே, வசந்த அமரசிங்க, லியரி லுசிதா, சேவில் பெனின் ஆகிய 13 பேருமே நியமனம் பெற்றவர்களாவர்.

### இலங்கையின் அரசியல் நிலை

## அதிகாரிகளுடன் கூடி ஆராய இந்திய தூதுவர் டெல்கி விரைவு

(கொழும்பு)

இலங்கையில் இதுவரை நடந்த சமாதான முயற்சிகளில் இந்தியா நேரடியான தலையீடு எதனையும் கொண்டிருக்கவில்லை என்பதுடன், அது தொடர்பான கவனம் எதனையும் செலுத்தவில்லை.

என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபம் சென் நேற்று கொழும்பில் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

இலங்கையின் சமாதான முயற்சியில் இந்தியா எவ்வாறு நேரடியாக ஈடுபடுவது என்பது தொடர்பாக சில யோசனைகளை முன்வைத்துள்ளதாகவும் இந்தியத் தூதுவர் நிருபம் சென் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை புதிய பிரதமராக்ப் பதவியேற்ற மஹிந்த ராஜபக்ஷ மற்றும் லக்ஷ்மன் கதிர்காமரைச் சந்தித்த நிருபம் சென் நேற்றுமாலை கலந்துரையாடலை நடத்துவதற்காக புதுடெல்கி சென்றதாகத் தெரிவிக்கப்ப

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஐக்கிய தேசிய முன்னணியின் கீழ் தேர்தலில் போட்டியிட்ட போதும், பிரிந்துசெல்லும் உடன்படிக்கையை கைச்சாத்திட்டே போட்டியிட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

வும் இந்தியத் தூதுவர் நிருபம் சென் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை புதிய பிரதமராகப் பதவியேற்ற மஹிந்த ராஜபக்ஷ மற்றும் லக்ஷ்மன் கதிர்காமரைச் சந்தித்த நிருபம் சென் நேற்றுமாலை கலந்துரையாடலை நடத்துவதற்காக புதுடெல்கி சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஜனாதிபதி – ரணில் நேற்று சந்தித்து பேச்சு!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் சந்தித்து உரையாடினார்.

ஜனாதிபதி சந்திரிகாவின் விசேட அழைப்பின் பேரிலேயே- நேற்று மாலை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. சுமார் 2 மணி நேரம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில்- என்ன விடயம் பேசப்பட்டது என்பது குறித்து இருவருமே எந்தக் கருத்தையும் வெளியிடாத போதிலும், அடுத்தகட்ட அரசியல் நகர்வுகள் குறித்தும் சமாதான முன்னெடுப்புக்கள் குறித்தும் கலந்துரையாடியிருக்கலாம் என ஊகம் தெரிவிக்கப்படுகிறது. (01)

# நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்க யாப்பில் திருத்தம் கொண்டுவரத் திட்டம்!

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குவதற்கு, யாப்பில் புதிய திருத்தங்களைக் கொண்டுவரத் திட்டமிட்டுள்ளதாக- ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

நேற்று நாட்டு மக்களுக்கு அவர் ஆற்றிய உரையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தாவது-

நின்று போயுள்ள சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டு, சிறந்த எதிர்காலத்தை இந்த நாட்டில் உருவாக்க புதிய அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது. மிகவும் உறுதியான உன்னதமான தேசத்தினைக் கட்டியெழுப்புவதற்கு அனைத்து இலங்கையரும் கைகோர்த்து நிற்கவேண்டும்.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி, அனைத்து மக்களும் நன்மைபெறக்கூடிய வகையில் பல அரிய திட்டங்களை வகுக்க நாம் திட்டமிட்டுள்ளோம்.

ஊழலும், செயல்திறனற்றதுமான ஆட்சிமுறை ஒழிக்கப்பட்டு- நீதியான செயற்திறன் மிக்க ஆட்சி அமைக்கப்படவுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, தேர்தல் காலத்தில் முன்வைத்த வாக்குறுதிகளை நடை

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளினது திட்டவரைபின் அடிப்படையில் உடன்பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும்

## தமிழரசுக்கட்சி எம்.பிக்கள் கூட்டறிக்கை

தமிழீழ விடுதலைப் புலிகளால் கடந்த ஆண்டு ஒக்டோபர் 31 ஆம் திகதி முன்வைக்கப்பட்ட திட்ட வரைபின் அடிப்படையில் தமிழ் மக்களின் ஏகோபித்த உண்மையான பிரதிநிதிகளான, விடுதலைப் புலிகளுடன் தாமதமின்றி பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று, தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 20 பேரும் கையெழுத்திட்டு வெளியிட்டிருக்கும் அறிக்கையில் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூடி ஆராய்ந்த பின்னர் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

இந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது-

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புதிய பிரதமர் மகிந்தவா? ரணிலா? ஜனாதிபதி சந்திரிகாவுக்கே குழப்பமா?

## தொலைக்காட்சி உரையில் தடுமாற்றம்

புதிய பிரதமராக தனது கட்சியைச் சேர்ந்த மஹிந்த ராஜபக்ஷவை நியமித்த ஜனாதிபதி சந்திரிகா - நேற்றிரவு தொலைக்காட்சி ஒன்றினூடாக உரையாற்றிய போது 'பிரதமராக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டிருப்பதாக' குறிப்பிட்டார்.

நேற்றிரவு 9.45 மணியளவில் தனியார் தொலைக்காட்சி ஊடாக ஜனாதிபதி சந்திரிகா நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

சிங்கள மொழி மூலம் நிகழ்த்திய

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email :- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

# யாழ்.மாநகர சபைக்கு 4 உழவு இயந்திரங்கள்

## அரச அதிபர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

நொராட் நிறுவனத்தின் சூழல் பாதுகாப்பு நீர்முகாமைத்துவ திட்டத்தின் கீழ் யாழ்.மாநகரசபைக்கு நான்கு உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு நேற்று மாலை யாழ்.செயலகத்தில் இடம்பெற்றது. உழவு இயந்திர ஆவணங்களை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ. பத்மநாதன், யாழ்.மாநகரசபை ஆணையாளர் இராமலிங்கத்திடம் கையளித்தார்.

இந்த நிகழ்வை தொடர்ந்து அரசாங்க அதிபர் கருத்து தெரிவிக்கையில், எதிர்வரும் 2005 ஆம் ஆண்டில் யாழ்.மாவட்டம் முழுமையான நகரமாக மாறிவிடும். கடந்த ஆண்டுகளில் அழிவடைந்த யாழ்.பொது நூலகம், துரையப்பா விளையாட்டரங்கு, தபால் நிலையம் என்பன புனரமைக்கப்பட்டுள்ளன. இவற்றை விட சுப்பிரமணியம் பூங்கா புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

### 55 ஆவது ஆண்டு விழா விளையாட்டுப் போட்டிகள்

(அரியாலை)

நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தின் 55 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு எதிர்வரும் செவ்வாய்க் கிழமை காலை 8.30 மணிக்கு நீளம பாய்தல், உயரம் பாய்தல் ஆகிய போட்டிகள் நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (55)

# சாவகச்சேரி நகரிலுள்ள நகரசபை விளையாட்டு மைதானத்தை மீள ஒப்படைக்க இராணுவம் இணக்கம்

## இந்த மாதம் 19 ஆம் திகதி கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள சாவகச்சேரி நகர சபை விளையாட்டு மைதானம் இந்த மாதம 19 ஆம் திகதி நகரசபையிடம் கையளிக்கப்படவுள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

சாவகச்சேரி நகரில் அமைந்துள்ள இந்த விளையாட்டு மைதானத்தை படையினர் தென்மராட்சிப் பிரதேசத்தைக் கைப்பற்றியவேளை இராணுவ உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தி தமது தேவைகளுக்காகப் பயன்படுத்தினர்.

இராணுவத்தினரின் உலங்கு வானூர்திகள் தரை இறங்குவதற்கும் இந்த முகாம் படையினரால் பயன்படுத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

முன்னர் இந்த நகரசபை விளையாட்டரங்கை ஒப்படைப்பதாக நகர சபை செயலாளருக்கு தெரிவித்த போதிலும் இறுதி நேரத்தில் இராணுவத்தினரால் மறுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை-இந்த மைதானத்திற்கருகில் இருந்த விறுமர் கோவிலைச்சூழ இராணுவவேலி அமைக்கப்பட்டுள்ளதால் வழிபடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (29)

### வரணி வடக்கில்

# குடும்பஸ்தர் தாக்கப்பட்ட சம்பவம் நான்கு பேர் பொலிஸாரால் கைது!

(சாவகச்சேரி)

வரணிப்பகுதியில் வீட்டினுள் அத்துமீறி நுழைந்த குழு, அங்கிருந்த குடும்பஸ்தர் ஒருவரை வாளால வெட்டிய சம்பவம் தொடர்பாக 4 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த சனிக்கிழமை, வரணி வடக்கிலுள்ள சின்னத்தம்பி சிவஞானம் என்பவரது விட்டினுள் நுழைந்த இனம் தெரியாத கும்பலொன்று அவரை வெட்டிக் காயப்படுத்தியது.

இந்தச் சம்பவம் தொடர்பாக, பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது 4 பேரைக் கைது செய்தனர். இவர்களை சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தவேளை, அவர்களை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (29)

# கூட்டெரு தயாரிக்க தொழிற்சாலை யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படும்!

நொராட் நிறுவனம் யாழ்.மாநகர சபைக்குட்பட்ட 17 குளங்களையும், 6 கால்வாய்களையும் புனரமைப்புச் செய்வதற்கு முன்வந்துள்ளது.

இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை அந்த நிறுவனத்தின் அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தக் கால்வாய்கள் புனரமைப்பதற்கு 17 மில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இத்துடன், யாழ்.மாவட்டத்திலிருந்து அகற்றப்படும் கழிவுப் பொருட்களைக் கொண்டு கூட்டெரு தயாரிப்பதற்கான தொழிற்சாலை ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.

### இருவேறு விபத்துக்களில் ஆறு பேர் காயமடைந்தனர்

சுன்னாகம், இணுவில் ஆகிய இடங்களில் நேற்று இடம்பெற்ற இரு விபத்துச் சம்பவங்களில் 6 பேர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று மின்கம்பத்துடன் மோதியதில் மோட்டார் சைக்கிளில் சென்ற எஸ்.மயூரன், கே.துஷி, எஸ்.சுந்திரகுமார் ஆகியோர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை - இணுவில் காங்கேசன்துறை வீதியில் - மோட்டார் சைக்கிளும், சைக்கிளும் மோதியதில் அதே இடத்தைச் சேர்ந்த எம். பகீரதன், ரி.நிசாந்தன், எஸ்.கந்தையா ஆகியோர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த 6 பேரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

### பயிற்சிப் பாசறை

மக்கள் நலன்புரிச் சங்க படையணிகளால் வருடாவருடம் நடத்தப்படும் யாழ்.மாவட்ட தேசியப் பயிற்சிப் பாசறை நிகழ்வு இன்று முதல் மூன்று தினங்கள் நடைபெறும். ஐந்து பாடசாலைகளைச் சேர்ந்த 400 க்கும் மேற்பட்ட தொண்டர்கள் பங்குபற்றவுள்ளனர். தலைமைத்துவம், பாலங்கள் அமைத்தல், அணி நடை, சமையல், திசையறிதல், பாசறையமைத்தல் போன்ற பலவிதமான பயிற்சிகள் வழங்கப்பட்டு, போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

### சாவகச்சேரி நகரசபைப் பிரிவில்


# 5 இலட்சம் ரூபா செலவில் இரு வீதிகள் புனரமைப்பு

சாவகச்சேரி நகரசபை இந்த வருடத்திற்கான பிரமான அடிப்படையில் 5 இலட்சம் ரூபா செலவில் இரு வீதிகளை புனரமைப்புச் செய்யவுள்ளது.

புகையிரத நிலைய வீதி மூன்று இலட்சம் ரூபா செலவிலும், முதலாம் ஒழுங்கை அம்மன் வீதி 2 இலட்சம் ரூபா செலவிலும் புனரமைக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை நகரசபை அதிகாரிகள் மேற்கொண்டு வருவதாக அந்த அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (29)

# இவர்களைக் கண்டீர்களா





**பாலகிருஸ்ணன் சுபாஸ்கரன்**
**இல. 63, காந்தான் தோட்டம்**
**கணேசபுரம் வவுனியா**
**(சிகை அலங்கரிப்பவர்)**
I.C.No.712520400X

**ஜெ.சுலோசினா சுபாஜினி**
**சின்னகருசல், பேசாலை**
**மன்னார்**
I.C.No.825682732V

13.12.2003 இல் நாவாந்துறையைச் சேர்ந்த இம்மானுவேல் (நூல்கட்டும் ஆசீர்வாதம்) வீட்டில் இரண்டு இலட்சம் ரூபா பணமும் 90 பவுண் நகையும் மேற்படி இருவரினாலும், திருடப்பட்டது. தப்பிச் சென்ற இவர்களில் சுபாஜினி என்பவரை 22.01.2004 அன்று தமிழீழ காவல்துறையினர் கிளிநொச்சியில் வைத்து கைதுசெய்து, 40 பவுண் நகையையும் இரண்டு லட்சம் ரூபா பணத்தையும் மீட்டு உரியவரிடம் ஒப்படைத்தனர்.

அக்களவு தொடர்பாக பாலகிருஸ்ணன் சுபாஸ்கரன் என்பவரை சம்பந்தப்பட்டவர்கள் தேடிவருகின்றனர். இவரைக் கண்டவர்கள் அல்லது, இவர் தொடர்பாக தகவல் அறிந்தவர்கள் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திலோ அல்லது 071 2373404 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ கீழ் காணும் முகவரியுடனோ தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

இக்களவில் ஒரு பகுதியை மீட்பதற்கு உதவியவர்களிற்கும் தமிழீழ காவல்துறையினருக்கும் ஸ்ரீலங்கா பொலிஸ்நிலையத்தினருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

**இம்மானுவேல்**
78/2 **கடற்கரை வீதி, நாவாந்துறை,**
**யாழ்ப்பாணம்.**

(710)

# ஸ்ரான்லிக் கல்லூரி வீதியில் குப்பைக்குள் வெடிகுண்டு மீட்பு

(அரியாலை)

அரியாலை கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயத்திற்கு முன்பாக உள்ள வீதியிலுள்ள குப்பைக்குள் இருந்து வெடிகுண்டு ஒன்று மீட்கப்பட்டு வெடிக்கவைக்கப்பட்டது.

கடந்த வியாழன் அன்று பிற்பகல் வேளையில் கண்டுபிடிக்கப்பட்ட இந்தக்குண்டானது, குண்டு செயலிழக்க வைக்கும் பொலிஸார் வரவழைக்கப்படடு உடனடியாக வெடிக்க வைக்கப்பட்டது. (55)

### உப்புமடம் வீதி திருத்தப்படவில்லை

(கந்தரோடை)

கோண்டாவில் உப்புமடப் பிள்ளையார் கோவில் சந்தியில் இருந்து கோண்டாவில் கிழக்குச் சந்திவரையான பாதை பலகாலமாகத் திருத்தப்படாமல் உள்ளது. உரியவர்களிடம் பலமுறை முறைப்பாடு செய்தும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. பாவனைக்கு உதவாத நிலையிலுள்ள இவ்வீதியால் போக்குவரத்து செய்யும் மக்கள் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (69)



# அன்பார்ந்த தமிழீழ மக்களே...

நாமெல்லோரும் தேசியத் தலைமையின் கீழ் ஒன்றுபட்டு நிற்கின்றோம்.
விடுதலையை நோக்கிய பயணத்தில் விடுதலைப்புலிகளும் மக்களும் இணைந்தே பயணிக்கின்றார்கள்.
மரபுவழித் தாயகம், சுய நிர்ணயம், தமிழ்த் தேசியம் இவை எல்லாத்தமிழ் மக்களுக்கும் பொதுவான அரசியல் அபிலாசைகள்.
இவற்றை சந்தேகத்துக்கிடமின்றி சர்வதேசத்துக்கு நிரூபித்துக் காட்டியுள்ளீர்கள். உங்கள் வாக்குகளால் தெளிவான ஆணையை வழங்கியுள்ளீர்கள். தமிழ்த் தேசியத்தின் கரங்களைப் பலப்படுத்தி விடுதலைப் போராட்டத்தில் நீங்களும் ஒரு பங்காளிகள் என்பதை உலகறியச் செய்துள்ளீர்கள். அதேவேளை பெண்களின் பிரதிநிதி ஒருவரைத் தெரிவு செய்து பெண்களின் பிரச்சினைகளுக்காக பெண் குரல் பாராளுமன்றத்தில் ஒலிப்பதை உறுதிசெய்துள்ளீர்கள்.

இவை அனைத்திற்கும் நன்றி கூறி உங்களை அந்நியப்படுத்த நான் விரும்பவில்லை. மாறாக கொள்கையை மதிக்கும் மக்கள் வாழும் நாட்டில் நானும் பிறந்தேன், வளர்ந்தேன், இன்று அவர்களின் ஒரு பிரதிநிதியாக பாராளுமன்றம் செல்கிறேன் என்பதை எண்ணி நான் பெருமைப்படுகின்றேன்.

இராணுவ, சமூக அடக்குமுறைகளால் பெண்கள் வெட்கப்பட்டு, அடங்கி, ஒடுங்கி வாழ்வதும் அவர்களுக்குப் பாதுகாப்பான ஒரு இடம் கிடைக்கும் போது அளவிடமுடியா துணிவுடன் வெளிவந்து அதிசயிக்கத்தக்க திறமைகளை வெளிப்படுத்தி சாதனைகளின் சொந்தக்காரர்களாவதும் நாம் அனுபவத்தில் கண்டுணர்ந்த உண்மை. நான் பாராளுமன்றம் செல்வது அத்தகையதொரு சாதனையே. ஆனால் அதற்கு உறுதுணையாக நின்றுழைத்த நீங்கள்தான் அதன் சாதனையாளர்கள்.

பெண் விடுதலை தாயக விடுதலையுடன் பின்னிப் பிணைந்தது. பெண்கள் துணிவுடன் நிமிர்ந்தெழ எமது தேசத்தின் விடுதலை விரைவுபடுத்தப்படும். அவ்வாறு உருவாகும் தேசத்தில் உற்சாகமான பெண்கள் ஆண்களுடன் இணைந்து எமது தேசத்தை உலகம் வியக்கும் வண்ணம் கட்டியெழுப்ப வேண்டும் என்பது தான் எனது கனவு.

பெண்களைப் பயிற்றுவித்து செயற்றிறன் மிக்க பெண்தேச நிர்மாணிகளை உருவாக்குவதே எனது தலையாய பணி. பெண்களுக்கு புதிய வேலை வாய்ப்புகளையும், அவர்களுக்கான வளம்மிகுந்த எதிர்காலத்தையும் உருவாக்கும் இப்பணியில் என்னை அர்ப்பணிப்புடன் இணைத்துக் கொள்வேன் என உறுதிகூறுகின்றேன்.

உயர்ந்தவர்கள் நாமெல்லோரும்
உலகத்தாய் வயிற்று மைந்தர்
நசிந்து இனிக் கிடக்கமாட்டோம்
நாமெல்லாம் நிமிர்ந்து நிற்போம்.

பத்மினி சிதம்பரநாதன்

இலங்கைத் தமிழரசுக்கட்சி

(சி/2407)




நாகம்ஸ் சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும ஒரேதின வெளியீடாக
விஜய், சிம்ரன், விவேக் தலைவாசல்
விஜய் மற்றும் பலர் நடித்த
A.R. ரஹ்மானின் இசையில்
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)
(சி-2397)

திறைஞ்சனாஸ் சங்கானை

இன்று முதல
விஜய், மீனா, றிச்சற் பற்றன் நடித்த
ஷாஜகான்
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00.(பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு : இரவு 8.45 (பு.நே)
Maid in Man Hattan
(சி-2386)

Dip. in Hardware

Period- 72 Hours
Time 09.30 - 16.30
10/04/2004 லிருந்து
26/04/2004 வரை



மிகக் குறுகியகால, மிகப் பயன்மிக்க, யாழ் நகரில் முதன்முதலாக அறிமுகப் படுத்தப்படும் இப் பாடநெறியில் இணைந்து பயன்பெறுவதற்காக உடன் பதிவு செய்து கொள்ளுங்கள்
பதிவுகளிற்கு
STP
73, Palaly Road, Kantharmadam.
T.P:021-222-2674

ராஜா யாழ்ப்பாணம்.

லிட்டில் சூப்பர் ஸ்டார்
சிம்பு நடித்த
தம்



காட்சி நேரம்:-
10.30, 2.30, 6.30,9.30 (பு.நே)
(சி-2263)

## நீதிமன்ற மறுசீரமைப்பு தொடர்பாக யோசனை சமர்ப்பிக்க நீதியரசர் முடிவு

(கொழும்பு)

அரசாங்கம் புதிய யாப்பு ஒன்றை அமைக்கும்போது மேற்கொள்ளவேண்டிய நீதிமன்ற மறுசீரமைப்புத் தொடர்பான யோசனைகளைச் சமர்ப்பிக்க, பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தீர்மானித்துள்ளார்.

தற்போது நிலவும் நீதிமன்றக் கட்டமைப்பின்மூலம், சிறந்த சேவை ஒன்றை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் வகையில் மறுசீரமைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என, பிரதம நீதியரசர் வலியுறுத்தியுள்ளார்.

வலய மட்டத்திலான மேன்முறையீட்டு நீதிமன்ற செயற்திட்டம் ஒன்றை புதிய அரசியல் யாப்புக்கான யோசனைகளில் உள்ளடக்க தீர்மானித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

புதிய அரசியல் யாப்பின்கீழ் நீதிமன்றக் கட்டமைப்பில் மேற்கொள்ளவேண்டிய மறுசீரமைப் புத் தொடர்பாக நீதிச்சேவை ஆணைக்குழு, நீதிச்சேவையுடன் தொடர்புடைய சிரேஷ்ட நீதியரசர்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளவுள்ளதாகவும் பிரதம நீதியரசர் மேலும் தெரிவித்தார்.

## மட்டக்களப்பிலிருந்து 5 புதுமுகங்கள் நாடாளுமன்றத்திற்குத் தெரிவு

(மட்டக்களப்பு)

முதன்முறையாக மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து ஐந்து புதுமுகங்கள் நாடாளுமன்றத் துக்குத் தெரிவாகியுள்ளனர்.

கடந்தமுறை நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை வகித்த எவரும், இந்தமுறை தேர்த லில் தெரிவாகவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஜோசப் பரராஜசிங்கம் தேர்தலில் வெற்றியீட்டவில்லை. தங்கவடிவேல், கிருஷ்ணபிள்ளை ஆகியோர் இந்தமுறை தேர்தலில் போட்டியிடவில்லை.

பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் போட்டியிட்ட ஹிஸ்புல்லா வெற்றிபெறவில்லை. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸில் வெற்றிபெற்ற முகைதீன் அப்துல் காதரும் அண்மையில் காலமாகிவிட்டார். இதனால், நாடாளுமன்றத்தில் புதுமுகங்களே செல்லவுள்ளனர்.

இவர்களில் தங்கேஸ்வரி கதிர்காமர் - கராச்சியிலிருந்து மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்ட முதலாவது பெண் நாடாளுமன்ற உறுப்பினராவர். (01)

# கைச்சாத்திடப்படும் இறுதி நிலையில் இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம்

## இராணுவத்தளபதி பலகல்ல பேட்டி

இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படக்கூடிய இறுதிக் கட்டத்தில் இருக்கிறது. எமது வரைபு ஆவணங்கள் கிட்டத்தட்ட தயாரிக்கப்பட்டு முடிந்துவிட்டது. இந்திய பாதுகாப்பு செயலர் விரைவில் தமது ஆவணத்தை எடுத்து அனுப்பிவைப்பார்.

இரு தரப்பும் இணங்கிக்கொண்ட பின்னர் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் என இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல இந்தியப் பத்திரிகையாளரான ராமானந்த சென்குப்தாவுக்கு அளித்த பேட்டி யில் குறிப்பிட்டிருக்கிறார்.

இராணுத் தலைமையகத்தில் வைத்து அளித்த பேட்டியில் அவர் மேலும் குறிப்பிட் டதாவது -

**கேள்வி** - இந்த ஒப்பந்தத்தின் கட்டமைப்பு என்ன?

**பலகல்ல** - என்னிடம் இதைப் பற்றிய எல்லா விபரங்களும் இல்லை. ஆனால், அடிப்ப டையில் இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு மற்றும் நெருங்கிய ஒத்துழைப்பு விடயங்களை இது உள்ளடங்கியிருக்கின்றது.

இதில் இலங்கைப் படையினருக்கான பயிற்சித் தரத்தை அதிகரிக்கவும் முடிவு செய் துள்ளோம்.

**கேள்வி** - இதுபோன்ற பாதுகாப்பு ஒப்பந் தங்களை வேறு நாடுகளுடனும் செய்துகொள் ளும்படி அரசுக்கு ஆலோசனை கூறினீர்களா? அல்லது அப்படிப்பட்ட ஒப்பந்தங்கள் ஏதேனும் நடைமுறையில் இருக்கின்றனவா?

**பலகல்ல** - இப்போதைய சூழலில், எம்மிடம் வேறு நாடுகளுடன் பாதுகாப்பு ஒப்பந்தங்க ளைச் செய்துகொள்வதற்கான திட்டங்கள் எதுவும் இல்லை.

ஆனால், நாம் சீனாவுடன் ஒரு உடன்படிக் கையைச் செய்திருக்கிறோம்.

அது நொறிங்கோ (Norinco) எனப்படும் ஆயுதங்களைத் தயாரித்து விற்பனை செய்யும் நிறுவனத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்த மேயன்றி, பாதுகாப்பு ஒப்பந்தம் அல்ல.

**கேள்வி** -இந்தியாவுடனான பாதுகாப்பு ஒப்பந்தம் முப்படைகளையும் உள்ளடக்கிய தொன்றா?

**பலகல்ல** - உண்மையாக - முப்படைகளை யும் உள்ளடக்கியது இந்த ஒப்பந்தம். அத்து டன், ஒத்துழைப்புக்கு ஏற்ற முன்னேற்றப்பா டுகளைச் செய்தல் மற்றும் இராணுவ நடவடிக் கைகளை முன்னேற்றி, அதனை இரு நாடுக ளுக்குமிடையில் நடைமுறைப்படுத்தும் திட் டங்களை இந்த ஒப்பந்தம் கொண்டிருக்கிறது.

**கேள்வி** - இராணுவத் தளபதி என்ற முறை யிலும், தனிப்பட்ட ரீதியிலும் - இந்தியா எத்த கைய உதவிகளை இலங்கைக்கு வழங்கும் என நினைக்கின்றீர்கள்?

**பலகல்ல** - எமது படையினருக்கு இந் தியா பயிற்சி வழங்குகின்றது. இது தொடர்ந் தும் வழங்கப்படும். அத்துடன், பயிற்சிகள் மேலும் அதிகரிக்கப்படும். இரு நாட்டு கடற் படைகளினதும், உறவுகளையும், ஒத்துழைப் புக்களையும் வழங்கவுள்ளோம். இதன்மூலம் புலிகளின் ஆயுதக் கடத்தலைத் தடுக்கலாம்.

**கேள்வி** - இத்தகைய ஒத்துழைப்புக்காக எதுவும் இப்போது நடைமுறையில் இல் லையா?

**பலகல்ல** - குறிப்பிடத்தக்க புரிந்துணர் வுக்கு ஏற்ற வகையிலான ஒத்துழைப்புக்கள் இருக்கின்றன. அடிக்கடி சந்தித்துக் கொள்வ தினால் நல்ல உறவும், இணைப்பும் ஏற்படு கின்றது.

சிலவேளைகளில் எமக்கு விமானங்களின் தேவை ஏற்படுகின்றபோது, போக்குவரத்து விமானங்களை வாடகைக்குப் பெறமுடிகிறது.

**கேள்வி** - அதிகாரிகள் தரத்தைச் சேர்ந்த வர்களின் பற்றாக்குறையால் இந்திய இராணு வம் முக்கிய பிரச்சினைகளை எதிர்நோக்கு கின்றது. நாட்டின் மிகப்பெரிய தொழில் படை யான இராணுவத்தால் இதேபோன்ற பிரச் சினை உள்ளதா?

**பலகல்ல** - நாம் இதே பிரச்சினைகளை முன்னைய அதிகாரிகள் தரத்தவர்களுக்காக நடத்திய ஆட்சேர்ப்பின்போது எதிர்கொண்டி ருந்தோம். இதன்போது அதிகாரிகள் தரத்துக்கு சேரமுன்வருபவர்கள் குறைவாக இருந்தனர்.

இப்போது இருப்பவர்களைப் போன்று தரமானவர்களை அப்போது சேர்த்துக்கொ[illegible] முடியவிலலை. தற்போது மிகவும் கட்டு[illegible] டனும் கடுமையான அணுகு முறைகளுடனும் இளம் அதிகாரிகளை தெரிவுசெய்கிறோம். அது ஒரு பிரச்சினையாக இருந்[illegible]லும், இதற் குத் தகுதியான அதிகாரிகளை[illegible] பெற் றுள்ளோம்.

**கேள்வி** - சமாதான முயற்சிகளின் [illegible]ன்னர் இலங்கை இராணுவத்தின் [illegible] மாற்றம டைந்திருக்கின்றதா?

**பலகல்ல** - இருக்கலாம், இராணுவத்தின ரின் பங்களிப்புகள் ஒரு குறுகிய காலகட்டத் தில்தான் அமைந்தது. ஆனால், தற்போதைய நிலை முன்புபோல் ஆட்களை குறுகிய காலத் தில் சேர்ப்பதில்லை. நாம் அவசரமாக ஆட்க ளைச் சேர்க்கும்போது, தரம் குறைவானவர்க ளையும் சேர்த்துக்கொள்ளவேண்டும்

**கேள்வி** - நாட்டில் சமாதானத்தை நிலை நாட்டுவதும், மற்றும் இயற்கை அழிவுகளின் போது உதவிபுரிவது ஆகியவற்றைவிட, இலங்கை இராணுவம் எத்தகைய பங்கை வகிக்கிறது?



**பலகல்ல** - புலிகளின் பிரச்சினையைச் சமா ளிக்க எமக்கு பாரிய படைபலம் தேவை. வடக குக் - கிழக்கு, கொழும்பு மற்றும் நாடு முழுவதையும் பாதுகாப்பதற்கு எமக்கு பெரும் படைப்பலம் தேவை. இதன்மூலம்தான் புலி களை சமாளிக்கமுடியும் என்ற நிலையில் தான் யுத்த நிறுத்தம் ஏற்பட்டது. இது மிகவும் நல்லதாகி விட்டது. இதனால் பிரச்சினைகள் அவ்வளவாக ஏற்படவில்லை. ஆகவே சட்டத்தி னைப் பேணுவது, பொலிஸாருக்கு உதவுவ தில் படையினர் ஈடுபட்டுள்ளார்.

**கேள்வி** - சமாதானப் பேச்சுக்கள் முறிவடை யும் பட்சத்தில் இராணுவ நடவடிக்கையை முன் னொடுக்கும்நிலை ஏற்படுமானால் - புலிகளின் பலத்தை இராணுவம் எதிர்கொள்ளுமா?

**பலகல்ல** - நாம் எப்போதும் சண்டைக்குத் தயாராகவே இருக்கிறோம். வடக்குகிலும் கிழக்கிலும் போருக்கு இன்னும் நாம் ஆயத் தமாகவே இருக்கிறோம். எமது நிலைப்பாடு எப்போதும்போல்தான் இருக்கிறது.

# ஐ.தே.கட்சியின் தோல்விக்கு ஊடகப் பிரிவும் காரணம்

## ரணில் குற்றச்சாட்டு



தேர்தல் பிர சாரத்துக்காகப் பெருந்தொகைப் பணம் செலவிடப் பட்டபோதிலும், தமது ஊடகப் பிரிவு அனுசரித்த முறைகளால், தம்மால் அரசாங் கத்தை அமைக்கமுடியாமல் போன தாக ஐக்கிய தேசியக் கட்சித் தலை வர் ரணில் விக்கிரமசிங்க குற்றஞ் சாட்டியுள்ளார்.

தேர்தலில் தோல்வி அடைந்த பின்னர் ஐ.தே.கட்சியின் அடுத்த கட்ட நடவடிக்கைகளை ஆராய்வதற்காக இடம்பெற்ற கூட்டத்திலேயே ரணில் இவ்வாறு தெரிவித்ததாக இணையத் தளம் ஒன்று செய்தி வெளியிட்டது.

பிரசாரத்துக்காக 9.6 கோடி ரூபா செலவழிக்கப்பட்டபோதிலும், ஐக்கிய தேசியக் கட்சியின் இலக்குகளை, கொள்கைகளைப் பிரசாரப்படுத்தா மல் ஜனாதிபதிமீது சேறு பூசிய தைத் தவிர, வேறு ஒன்றையும் செய்யவில்லை. ஊடகத்துறையில் பிரபல்யம் பெற்ற ஒரு சிலரால் மேற் கொள்ளப்பட்ட பிரசாரம் எதிர்க்கட் சிக்கு சாதகமாக அமைந்தது என பிரதமர் தெரிவித்ததாக அந்த இணை யத்தளம் மேலும் தெரிவித்துள்ளது.

## பிரதமர் தெரிவில் ஜே.வி.பி. அதிருப்தி ; பதவியேற்பு வைபவத்தைப் புறக்கணித்தனர்

புதிய பிரதமராக மஹிந்த ராஜபக்ஷவைத் தெரிவு செய்வதில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதான பங்காளியான ஜே.வி.பியினருக்கு கடும் அதிருப்தி எற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

முன்னதாக லக்ஷ்மன் கதிர்காமரை பிரதமராக நியமிக்கும் ஜனாதிபதியின் திட்டத்திற்கு ஜே.வி.பியினர் ஆட்சேபம் தெரிவித்தபோதும், இறுதியில் அவர கள் இதற்கான சம்மதத்தை அளித்தார்கள் என்றும் தெரியவந்துள்ளது. இதேவேளை, தங்களுக்கு மிக நெருக்கமானவர்களான அநுராபண்டார நாயக் காவை பிரதமர் ஆக்குவதிலேயே ஜே.வி.பியினர் மிகவும் முனைப்பாகச் செயற்பட்டனர் என்பது தெரிந்த விடயமே சில அரசியல் காரணங்களுக்காக ஜனாதிபதி தனது சகோரரான அநுராவை பிரதமராக நியமிக்க விரும்பவில்லை. என ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதமர் தெரிவில் தமக்குள்ள அதிருப்தியை தெரிவிக்கும் வகையில். பிரதமரின் பதவியேற்பு வைபவத்தில் ஜே.வி.பியினர் கலந்துகொள்ளாது புறக் கணித்துள்ளதாகவும் அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

## வெளிவிவகார அமைச்சராக லக்ஷ்மன் கதிர்காமர் நியமனம்?



லகஷமன் கதிர காமரை மீண்டும் வெளிவிவகார அமைச்சராக நிய மிப்பதற்கு முடி வெடுக்கப்பட்டுள் ளதாகவும், அவர் இதற்கு இணக்கம் தெரிவித்ததா கவும் தெரிவிக்கப்படுகிறது.

இதைவிட, அநுரா பண்டாரநா யக்க நிதியமைச்சராகவும், சுசில் பிரேம் ஜயந்தவை கல்வி அமைச்ச ராகவும், மங்கள சமரவீரவை ஊடகத் துறை அமைச்சராகவும் நியமிப்ப தற்கு முடிவுகள் எடுக்கப்பட்டுள்ள தாக ஜனாதிபதி செயலகச் செய்தி கள் தெரிவிக்கின்றன.

மஹிந்த ராஜபக்ஷவின் அமைச் சில் இடம்பெறவுள்ள 35 உறுப்பினர் களைக்கொண்ட அமைச்சரவையை நியமிப்பது தொடர்பாக ஜனாதிபதி தலைமையில் ஆலோசனைக் கூட்டம் இடம்பெற்றது.

முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில், முக் கிய அமைச்சின் பதவிகளுக்கு யார் யாரை நியமிப்பது என்பது தொடர் பாக நீண்டநேரம் ஆராயப்பட்டே முடி வுகள் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக் கப்படுகிறது.

## ஊர்காவல் படைவீரர் கொலை சந்தேகநபரான பெண் கைது

(கொழும்பு)

ஒலுவில் பிரதேசத்தில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்துடன் தொடர்பு டைய சந்தேகநபரான பெண்ணை - அக்கரைப்பற்றுப் பொலிஸார் நேற்று முன்தினம் கைதுசெய்தனர்.

ஒலுவில் பிரதேசத்தைச் சேர்ந்த ஊர்காவற்படை உறுப்பினர் ஒருவர் நேற்றுமுன்தினம் படுகாயமடைந்தநிலையில் வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டு, பின்னர் அங்கு உயிரிழந்தார். இந்தச் சம்பவத்துடன் தொடர்பு டைய சநதேகநபரான பெண்ணொருவரைப் பொலிஸார் கைதுசெய்தனர். தனிப்[illegible]ட பகை காரணமாகவே இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற் றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பாகிஸ்தானுடனான 2 ஆவது டெஸ்ட்; இந்திய அணி நெருக்கடி நிலையில்!



(லாகூர்)

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் லாகூரில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாவது நாளான நேற்று இந்திய அணி தனது இரண்டாவது இனிங்ஸில் 5 விக்கெட்டுக்களை இழந்து 149 ஓட்டங்களைப் பெற்று நெருக்கடியான நிலையில் உள்ளது.

முன்னதாக இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவின்போது 3 விக்கெட்டுக்களை இழந்து 355 ஓட்டங்களைப் பெற்ற பாகிஸ்தான் அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டத்தில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 489 ஓட்டங்களைப் பெற்று ஸ்திரமான நிலையை அடைநதது.

இந்த அணி சார்பாக இன்ஸமாம் உல் ஹக் 118, இம்ரான் பர்கத் 101, யுகானா 72, அசிம் கமல் 73, அக்தர் 19, உமர் குல் 14, தபீக் உமர் 24, யாசீர் ஹமீட் 19 ஆகியோர் கூடுதலான ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் பதான், பாலாஜி இருவரும் தலா 3 விக்கெட்டுக்களையும், கும்ளே இரண்டு விக்கெட்டுக்களையும், அகர்கர், டெண்டுல்கர் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தனது இரண்டாவது இனிங்ஸை விளையாடிக் கொண்டிருக்கும் இந்திய அணி நேற்றைய ஆட்டநேர முடிவின்போது 5 விக்கெட்டுக்களை இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இவ்வணி சார்பாக முக்கிய முன்னணி வீரர்கள் அனைவரும் சொற்ப ஓட்டங்களுக்குள் பாகிஸ்தான் பந்துவீச்சாளர்களின் பந்துவீச்சில் ஆட்டமிழந்ததே ஓட்ட எண்ணிக்கை குறையக் காரணமாகும்.

இதன்படி ஆகாஷ் சோப்ரா 5, டெண்டுல்கர் 8, லக்ஸ்மன் 13, யுவராஜ்சிங் 13 ஓட்டங்களுடனும் ராவிட் ஓட்டமெதுவும் பெறாமல் ரன் அவுட் முறையிலும் ஆட்டமிழந்தனர். தற்போது ஷேவாக் 86, பட்டேல் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

பந்துவீச்சில் மொகமட் சமி 2 விக்கெட்டுக்களையும், அக்தர் மற்றும் உமர் குல் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

## அவுட் கொடுக்காத நடுவர்கள் மீது பயிற்சியாளர் ஜோன்ரைட் புகார்!

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான 2 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி லாகூரில் நடைபெற்றுவருகிறது. இதன் 2 ஆம் நாள் *ஆட்டத்தின்போது நடுவர்களின் செயற்பாடு இந்தியாவுக்கு பாதகமாக இருந்தது.

இந்த டெஸ்டுக்கு அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த சைமன் டப்பெல், மேற்கிந்தியத் தீவுகளைச் சேர்ந்த ஸ்ரீவ் பக்னர் ஆகியோர் நடுவர்களாக பணியாற்றி வருகின்றனர். 2 ஆம் நாள் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணித்தலைவர் இன்ஸமாம், யுகானா ஆகியோருக்கு இந்திய பந்துவீச்சாளர்கள் பல முறை அவுட் கேட்டு முறையீடு செய்தார்கள். ஆனால் நடுவர்கள் அவுட் கொடுக்கவில்லை.

தொலைக்காட்சியில் பார்த்த போது நடுவர்கள் அவுட் கொடுக்காமல் இருந்தது தவறு என்று தெரியவந்தது. இன்ஸமாமுக்கு இரண்டு முறையும், யுகானா, இம்ரான் பர்கத் ஆகியோருக்கு தலா ஒரு முறையும் கும்ளே, பாலாஜி, இர்பான் பதான் பந்தில் நடுவர்கள் அவுட் கொடுக்காதது தெரிந்தது.


நடுவர்களின் செயற்பாடுகளால் இந்திய அணி பயிற்சியாளர் ஜோன் ரைட் அதிருப்தி அடைந்தார். நேற்றைய ஆட்டம் முடிந்த பிறகு அவர் போட்டி நடுவர் ரஞ்சன் மடுகல்லேயிடம் இரண்டு நடுவர்கள் பற்றி புகார் செய்தார்.

இர்பான் பதான் பந்துவீச்சில் இன்ஸமாம் 65 ரன்னிலும், யுகானா 35 ரன்னிலும் இருந்தபோது காலில் பந்து பட்டது. இதற்கு விக்கெட் காப்பாளர் பார்த்தீவ் பட்டேல் உரத்த சத்தத்தோடு எல்.பி.டபிள்யூ முறையீடு செய்தார். இதைத் தொடர்ந்து பட்டேல் மீது நடுவர்கள் இருவரும் போட்டி நடுவர் ரஞ்சன் மடுகல்லேயிடம் புகார் செய்தனர்.

இதைத்தொடர்ந்து அவரை விசாரணைக்கு ஆஜராகுமாறு மடுகல்லே ஆணை அனுப்பினார். விசாரணை முடிவில் பார்த்தீவ் பட்டேலுக்கு அந்தப் போட்டியில் பெறும் பணத்தில் 60 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

## மூன்றாவது டெஸ்டிலும் யுவராஜ் விளையாடுவார்

### கங்கூலி தெரிவிப்பு



(டெல்கி)

லாகூரில் தொடங்கிய இரண்டாவது டெஸ்டில் யுவராஜ்சிங் மிகவும் அபாரமாக ஆடி சதம் அடித்தார். 7 விக்கெட்டுக்களை இழந்து நெருக்கடியாக இருந்த நேரத்தில், இவர் சிறப்பாக விளையாடி சதம் அடித்து அனைவரது பாராட்டையும் பெற்றார். லாகூர் டெஸ்டையும் சேர்த்து அவர் மொத்தமாக 3 டெஸ்டில்தான் விளையாடியிருக்கிறார்.

ராவல்பிண்டியில் வருகிற 13 ஆம் திகதி தொடங்கும் 3 ஆவது டெஸ்டிலும் யுவராஜ்சிங் விளையாடுவார் என்று, கப்டன் கங்கூலி தெரிவித்தார். தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியதாவது -

யுவராஜ்சிங்கின் ஆட்டம் சிறப்பாக இருந்தது. இது எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. நீண்டகாலம் இந்திய அணிக்கு விளையாடக்கூடிய சிறந்தவீரர். ஆனால், அவருக்கு மத்திய வரிசையில் விளையாட வாய்ப்புக் கிடைக்காமல் போனது துரதிஷ்டமே. லாகூர் டெஸ்டில் அவர் சிறப்பாக விளையாடி தனது திறமையை வெளிப்படுத்தினார்.

இதனால் ராவல்பிண்டியில் நடைபெறும் மூன்றாவது டெஸ்டிலும் யுவராஜ்சிங் விளையாடுவார். வி.வி.எஸ்.லக்ஸ்மனின் ஆட்டம் சிறப்பாக இல்லை என்று குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இவ்வாறு கங்கூலி கூறினார்.

காயம் காரணமாக முதல் 2 டெஸ்ட்டில் விளையாடாத கப்டன் கங்கூலி - 3 ஆவது டெஸ்டில் விளையாடுவார். அவர் அணியில் இடம்பெறும்போது, யுவராஜ்சிங்கிற்கு வாய்ப்புக் கிடைக்காது, ஆனால், லாகூர் டெஸ்ட்டில் சதம் அடித்ததால் அவர் 3 ஆவது டெஸ்டில் விளையாடுவார் என கங்கூலி கூறியுள்ளார்.

இந்திய அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவர் யுவராஜ்சிங். சிறந்த அதிரடி ஆட்டக்காரரான இவருக்கு டெஸ்டில் வாய்ப்பு கிடைப்பது அரிதாகவே இருந்து வருகிறது.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பே டெஸ்ட் அணியில் இடம்பெற்றார். ஆனால், 11 பேர் கொண்ட அணியில் விளையாட வாய்ப்புக் கிடைக்கவில்லை.

2002 ஆம் ஆண்டு நியூஸிலாந்து அணி இந்தியா வந்தபோது, கப்டன் கங்கூலி காயம் காரணமாக விளையாடாததால், யுவராஜ்சிங்கிற்கு விளையாட வாய்ப்புக்கிடைத்தது. முல்தானில் நடந்த முதல் டெஸ்டில் அரைச்சதம் அடித்தார்.

# விளையாட்டு

## தெற்காசிய விளையாட்டுப் போட்டி; இந்தியா முதலிடத்தைப் பிடித்தது

(இஸ்லாமாபாத்)

9 ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டி பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் நடந்தது.

நேற்றுமுன்தினம் நடந்த கடைசிநாள் போட்டியில் இந்தியா - நீச்சல், துப்பாக்கி சுடுதலில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தியது. நீச்சலில் ரேஷ்மா மில்லத் (200 மீற்றர் பிரீஸ்டைல்), சுமி சிரியாக் (200 மீற்றர் பேக்ஸ் பிரோக்), சிவரஞ்சனி (200 மீற்றர் பிரஸ்பிரேஸ்), ரிச்சா மிஸ்ரா (100 மீற்றர் பட்டர்பிளை) ஆகியோர் தங்கப்பதக்கம் பெற்றனர். 4x00 மீற்றர் தொடர் நீச்சலிலும் தங்கம் கிடைத்தது.

துப்பாக்கி சுடுதலில் ஸ்டாண்டர்ட் பிஸ்டல் பிரிவில் ஜஸ்பால் ரானா தங்கப்பதக்கம் பெற்றார். அணிகள் பிரிவிலும் முதலிடம் கிடைத்தது.

தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியா 101 தங்கம், 59 வெள்ளி, 31 வெண்கலம் ஆக மொத்தம் 191 பதக்கங்களைப் பெற்று பதக்கப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது.

பாகிஸ்தான் 42 தங்கம், 55 வெள்ளி, 50 வெண்கலம் ஆக 147 பதக்கங்களுடன் இரண்டாவது இடத்தையும், இலங்கை 15 தங்கம், 33 வெள்ளி, 57 வெண்கலம் ஆக மொத்தம் 105 பதக்கங்கள் பெற்று மூன்றாவது இடத்தையும், நேபாளம் நான்காவது இடத்தையும், பங்களாதேஷ் 5 ஆவது இடத்தையும், ஆப்கானிஸ்தான் 6 ஆவது இடத்தையும், பூட்டான் கடைசி இடத்தையும் பிடித்தன.




## மொயின்கானின் எதிர்காலம் கேள்விக்குள்ளான நிலையில்



அணித்தலைவர் இன்ஸமாம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் அணியின் விக்கெட் காப்பாளர் மொயின்கான் காயம் காரணமாக இந்தியாவுக்கு எதிராக லாகூரில் தற்போது நடைபெற்றுவரும் 2 ஆவது டெஸ்டில் ஆடவில்லை.

இந்த நிலையில், மொயின்கான் தொடர்ந்து அணியில் இடம்பெறுவாரா என்பது கேள்விக்குறியாக உள்ளது. முதல் டெஸ்டில் மொயின்கானின் நடவடிக்கையால் பாகிஸ்தான் தேர்வுக்குழுத் தலைவர் வாசிம் ஜாபர் அதிருப்தியடைந்துள்ளார். இதனால், 3 ஆவது டெஸ்டில் அவர் நீக்கப்படலாம் என்று அந்நாட்டு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது. மொயின்கான் அனுபவம் வாய்ந்தவர். அவர் அணிக்குத் தேவையென்று பாகிஸ்தான் தேர்வுக்குழுவினரிடம் வாதிட்டுவருகிறார்.

## பாரதீய ஜனதாவுக்கு 272 ஆசனங்கள் கிடைக்குமென்கிறார் வெங்கையா நாயுடு

பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் வெங்கையா நாயுடு குஜராத் மாநிலத்தில் சுற்றுப்பயணம் செய்து தேர்தல் பிரசாரம் செய்து வருகிறார்.

டாமன் பகுதியில் பாரதீய ஜனதாவின் 25 ஆவது நிறுவுன தின விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போது -

பாரதீய ஜனதாவின் வளர்ச்சி மகத்தானது. 1984 ஆம் ஆண்டில் பாரதீய ஜனதாவுக்கு 2 எம்.பிக்களே இருந்தனர். படிப்படியாகக் கட்சி வளர்ந்து இப்போது பாரதீய ஜனதா எம்.பிக்களின் எண்ணிக்கை 200 ஐ நெருங்கிவிட்டது.

இந்த எண்ணிக்கை இத்துடன் நின்றுவிடப் போவதில்லை. நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் பாரதீய ஜனதா 272 இடங்களில் வெற்றிபெறும்.

தனித்து ஆட்சியமைக்கும் அளவுக்கு பாரதீய ஜனதா அமோக வெற்றிபெறும். நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக பாரதீய ஜனதா வளர்ச்சி காண்கிறது. ஆனால், அதேநேரம் காங்கிரஸ் கட்சி கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து வருகிறது. ஒரு காலத்தில் காங்கிரஸ் கட்சியே இல்லாமல் போய்விடும்.

காங்கிரஸ் கட்சி கடந்த 50 ஆண்டுகளில் செய்யாத சாதனையை பாரதீய ஜனதா 5 ஆண்டுகளில் செய்து முடித்திருக்கிறது. இதனால் தான் பாரதீய ஜனதா இந்தளவுக்கு வளர்ச்சியைக் காணமுடிந்தது.

பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் வாஜ்பாய்தான் பிரதமர் என்று உறுதியாகக் கூறிவிட்டோம். ஆனால், காங்கிரஸ் வெற்றிபெற்றால் யார் பிரதமர் என்பதை அவர்களால்



கூறமுடியவில்லை. பாரதீய ஜனதாவைப் பொறுத்தமட்டில் இது அந்தக் கட்சிக்கு எதிர்ப்பே இல்லாத தேர்தல்தான் என்று வெங்கையா நாயுடு கூறினார்.

## 83 தொகுதிகளுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடக்கம் நடைபெறவுள்ளது!

இந்திய நாடாளுமன்றத்துக்கு 5 கட்டமாக தேர்தல் நடைபெறுகிறது. முதல்கட்டத் தேர்தல் ஏப்ரல் 20 ஆம் திகதி தொடங்குகின்றது. முதல் 2 கட்ட தேர்தல்களுக்கும் வேட்புமனு தாக்கல் ஏற்கனவே முடிந்துவிட்டது.

3 ஆவது கட்ட தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நேற்றுடன் முடிவடைந்தது. ஏப்ரல் 26 ஆம் திகதி நடக்கும் 3 ஆவது கட்டத் தேர்தலில் 11 மாநிலங்களில் 137 நாடாளுமன்றத் தொகுதிகளுக்கு வாக்குப் பதிவு நடக்கிறது.

3 ஆவது கட்ட தேர்தலில் போட்டியிடும் முக்கிய தலைவர்கள் சோனியா (ரேபரேலி - உத்தரப் பிரதேசம்), ராகுல் காந்தி (அமேதி), ராம்விலாஸ் பாஸ்வான் (ஹாஜிபூர்), ஜோர்ஜ் பெர்ணாண்டஸ் (முசாப்பூர்), ராம்நாயக், நடிகர் கோவிந்தா (மும்பை வடக்கு), சரத்பவார் (பாராமதி) ஆகியோர் ஏற்கனவே மனுத்தாக்கல் செய்துவிட்டனர். நாளை இந்த மனுக்கள் பரிசீலனை செய்யப்படுகிறது.

4 ஆவது கட்டமாக 7 மாநிலங்களில் 83 தொகுதிகளுக்கும் 5 ஆம் திகதி தேர்தல் நடைபெறுகிறது. இந்த தேர்தலில் போட்டியிடுபவர்கள் வேட்புமனு தாக்கல் இன்று தொடங்குகின்றது. இதற்கான தேர்தல் அறிவிப்பு இன்று வெளியிடப்படும்.

ஏப்ரல் 15 ஆம் திகதியுடன் வேட்பு மனு தாக்கல் முடிவடைகிறது. மறுநாள் மனுக்கள் பரிசீலனை செய்யப்படும். மனுக்களை வாபஸ் பெற 19 ஆம் திகதி கடைசிநாள்.

அருணாசலப் பிரதேசம் (2 தொகுதிகள்), பீஹார் (12), காஷ்மீர் (1), மத்தியப் பிரதேசம் (12), நாகலாந்து (1), ராஜஸ்தான் (25), உத்தரப் பிரதேசம் (30) ஆகிய 7 மாநிலங்களில் நான்காவது கட்டத் தேர்தல் நடக்கிறது.

# வறுமைக்கோட்டிற்குட்பட்ட மக்களுக்கு வீடுகள் அமைத்துக்கொடுக்க நடவடிக்கை

(கிளிநொச்சி)

யாழ்.மாவட்டத்தில் உள்ள வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன. குறிப்பாக இடம்பெயர்ந்த மக்கள், மீளக்குடியமர்ந்த மக்கள் என்று வேறுபாடு இல்லாது குறிப்பிட்ட தொகை வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன.

இதற்கான கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் யாழ். செயலகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உதவி அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலர்கள், உதவித் திட்டப்பணிப்பாளர்கள், யு.என்.எச்.சி.ஆர் பிரதிநிதிகள், நிகொட் பொறியியலாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

யாழ்.மாவட்டத்தில் சுற்றுப்புற சூழல் தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

மண், கல் அகழ்ந்து எடுப்பதினால் - சூழலுக்கு எந்தவித நன்மை, தீமை கிடைக்கின்றது என்பது தொடர்பாக கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இடம்பெயர்ந்தவர்கள் என்று வேறுபாடு இல்லாது, வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு வீடுகள் அமைத்துக்கொடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக வறுமை கோட்டின் கீழ் காணிகள் உள்ள மக்களுக்கு ஒரு லட்சத்துப் பத்தாயிரம் ரூபா பெறுமதியான வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. இவற்றை விட வறுமைக் கோட்டின் கீழுள்ள விதவைகளுக்கும் வீடு அமைத்துக் கொடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

## கலாநிதிப்பட்டம் வழங்கி கௌரவிப்பு



தற்காப்புக் கலைகளுக்கான ஜப்பானிய உள்ளகப் பல்கலைக்கழகம் அருட்கவி சீ.விநாசித்தம்பிக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது.

கடந்த 28 ஆம் திகதி வெள்ளவத்தை பிரட்றிக்கா வீதியிலமைந்துள்ள மெயின் டொரோ மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் வைத்தே இந்தப் பட்டம் வழங்கப்பட்டது.

இந்தப் பட்டமளிப்பு விழாவில் ஜப்பானைச் சேர்ந்த டாக்டர் கஸ்ரோ, அமெரிக்காவைச் சேர்ந்த ஸ்ரீபன் டேன், நோர்வேயைச் சேர்ந்த மஸ்ரோம், ஜேர்மனியைச் சேர்ந்த டாக்டர் டான் ஆகியோர் கலந்துசிறப்பித்தனர். (206)

# நடந்துமுடிந்த பொதுத் தேர்தலில் முல்லை மக்கள் அதிகம் பங்கேற்பு

## முல்லை. அரசியற்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் விபரிப்பு

13 ஆவது நாடாளு மன்றத் தேர்தல் முடிவடைந்துள்ளது. விடுதலைப் புலிகள் - தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு ஆதரவாகக் களத்தில் இறங்கி பணியாற்றி யுள்ளார்கள்.

வன்னித் தேர்தல் தொகுதியில், குறிப்பாக முல்லைத்தீவில் ஏராளமான வாக்காளர், சென்றமுறை வாக்களிக்க முடியாமல் இருந்த நிலைமை இருந்தது.

ஆனால், இந்தமுறை எழுச்சியுடன் புள்ளடியிடும் ஒரு போராட்டமாக மக்கள் வாக்களித்துள்ளனர்.

இந்த மக்கள் தேர்தல் முடிவடைந்தபின்னர், என்ன பேசிக்கொள்கிறார்கள்- இந்த விபரங்களை அறிய முல்லைதீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளருடன் தொடர்பு கொண்டோம். எமது கேள்விகளுக்கு முல்லைத்தீவு மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் பதில் தந்தார்.

கேள்வி: மக்களுடைய நிலைமை என்னவாகவுள்ளது? அவர்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள்?

பதில்: மக்களுடைய உணர்வைப் பொறுத்தவரையில் அவர்களுடைய உணர்வு - தமது தேசியத்தை மீண்டுமொருமுறை நிலைநிறுத்தியிருக்கிறோம் என்பதிலும், ஜனநாயகமுறைப்படி சிங்கள அரசு விரும்பியதற்கு அமைய தமது உரிமையை மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளோம் என்ற உணர்வுடன் மக்கள் உள்ளனர்.

குறிப்பாக, கூட்டமைப்பு வெற்றி பெறுவதற்காக விடுதலைப் புலிகள் நேரடியாகவே களத்தில் நின்று செயற்பட்டமைக்கு அமைவாக அவர்களின் ஒட்டுமொத்தமான உணர்வு - வெற்றியின் பாதையொன்றுக்கு அழைத்துச் சென்றுள்ளது.

இதற்கு அடையாளமாக, இந்தக் கூட்டமைப்பின் வெற்றியை மகிழ்ச்சியாக மக்கள் கொண்டாடுகிறார்கள்.

கேள்வி : நீண்ட தூரத்திலிருந்து சிரமத்தின் மத்தியில் மக்கள் வந்திருப்பார்கள். அவர்கள் வரும் போது, எவ்வளவு சிரமங்களை அவர்கள் அனுபவித்திருப்பார்கள். மக்களின் சிரமங்கள் பற்றி நீங்கள் பார்த்த சம்பவங்கள் சிலவற்றைக் கூறுவீர்களா?

பதில் - வாக்களிக்கவேண்டும் என்ற உணர்வோடு, வாக்களிப்புத் தினத்திற்கு முதல்நாளே புளியங்குளத்திற்கு மக்கள் வந்துசேர்ந்தார்கள். அங்கு முகாம் இட்டு இருந்து, வாக்களித்துள்ளளனர் இதை நான் நேரடியாகப் பார்த்துள்ளேன்.

உண்மையில் நாங்கள் எண்ணிப் பார்க்காத அளவிறங்கு வயோதிபர் முதல் கைக் குழந்தை வரை அவர்கள் வாக்குரிமையை நிறைவேற்றவேண்டும் என்ற நோக்கில் செயற்பட்டனர்.

20 வருடங்களுக்கு மேலாக வாக்களிக்க முடியாத ஒரு சூழலில் மக்கள் இருந்துள்ளனர். வாக்களிப்பதால் எந்தவிதப் பயனும் இல்லை என்ற நோக்கில் இருந்தனர். இன்று வாக்களித்தமைக்குரிய சாதக நிலைமையை விளக்கிக் கூறியமையால் மக்கள் வாக்களித்தனர்.

ஐம்பது, அறுபது கிலோமீற்றர்களுக்கு அப்பால்வந்து மக்கள் வாக்களித்தனர் என்பது விடுதலைக்கான ஆள்மன உணர்வுடன் அவர்களை உந்தித் தள்ளியுள்ளது. வேறெந்த வித ஆசையும அவர்களுக்கு இல்லை.

கேள்வி : பல ஆண்டுகளுக்குப் பின்னர் முல்லைத்தீவு மக்கள் வாக்களிக்க வந்துள்ளனர். இந்த இடத்தில் இருந்து ஏராளமான வாக்குகள் நிராகரிக்கப்படலாம் என்ற கருத்து நிலவியிருந்தது.

எனினும் மிகக் குறைந்த அளவு வாக்குகளே நிராகரிக்கப்பட்டிருந்தது. இதற்கு என்ன காரணமாக இருக்கும்.

பதில் : நீண்ட தூரத்தில் இருந்தும் தமிழீழ விடுதலை நோக்கி வாக்களிக்க வந்த மக்கள் ஏகப் பிரதிநிதிகளாக புலிகளை ஏற்க வேண்டும் என வந்த மக்கள் தமது ஒவ்வொரு வாக்கும் வீணாகிப் போய்விடக்கூடாது என்பதில் ஒவ்வொருவரும் கரிசனையோடு செயற்பட்டுள்ளார்கள் என்றுதான் இதைக் கூறவேண்டும்.

குறிப்பாக தேசிய எழுச்சிப் பேரவையினர் கூடுதலான பங்களிப்பினை ஆற்றியுள்ளனர். ஒவ்வொரு கிராமங்களிலும் அது சார்ந்த செயற்பாடுகளிலும் தேசிய எழுச்சிப் பேரவை செயற்பட்டுள்ளது. இது ஒரு சவால் நிறைந்த சேவை. ஏனெனில் ஒவ்வொரு மக்களும் தமது வாக்குச் சீட்டு தமது பிழையால் நிராகரிக்கப்பட்டுவிடக்கூடாது என்பதில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தனர்.

இலங்கையின் விளங்கிக் கொள்ளமுடியாத தேர்தல் முறையால், வாக்களிப்பு முறையால் தமது லட்சியம் தவறவிடப்படக் கூடாது என்று மக்கள் கருதினர். ஆகவே, தமது வாக்குகளை அவர் கள் சரியாக அளித்து கூட்டமைப் பினரை வெற்றிபெறச் செய்துள்ள னர்.

# தொண்டர் படைப்பிரிவு அதிகாரிகள் உயர்தர பயிற்சியை முடித்தனர்

யாழ். குடாநாட்டில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரின் தொண்டர் படைப்பிரிவின் அதிகாரிகளுக்கும், சிப்பாய்களுக்கும் நடைபெற்ற உயர்தர தரைப்படைப் பிரிவினருக்கான பயிற்சியைப் பெற்ற முதலாவது அணியில் சிறந்த முறையில் பயிற்சியை முடித்து வெளியேறும் அதிகாரிகளினதும், சிப்பாய்களினதும் நிகழ்ச்சி கடந்த திங்கட்கிழமை எழுதுமட்டுவாள் உயர்தர தரைப் படைப்பிரிவின் பயிற்சி நிலையத்தில் யாழ். பாதுகாப்பு நடவடிக்கை கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் எம்.டி.என்.சந்திரபாலவின் தலைமையில் சிறந்த முறையில் நடைபெற்றது.

இந்தப் பயிற்சியைச் சிறந்த முறையில் பெற்ற தொண்டர் படைப் பிரிவின் அதிகாரிகள் 6 பேரும், சிப்பாய்கள் 2192 பேரும் பயிற்சி முடித்து வெளியேறினர்.

# புதிய பிரதமராக மகிந்தராஜபக்ஷ; யாழ். சு.கட்சி அலுவலகத்தில் கோலாகலம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் பிரதமராக மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் பொறுப்பேற்றதைக் குறிக்கும் வகையில் கொண்டாட்டங்கள், யாழ். நகரிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அலுவலகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் யாழ். நகரில் வேம்படி பாடசாலை வீதியிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். அலுவலகத்தில் ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டு பாடல்கள் இசைக்க விடப்பட்டிருந்தன. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பெரிய அளவிலான கட்அவுட் ஒன்றும் வைக்கப்பட்டு அலங்கரிக்கப் பட்டிருந்தது.

அத்துடன் வீதியால் பயணித்த பொதுமக்களுக்கு சிற்றுண்டிகளும் வழங்கப்பட்டது. இதே வேளை இந்த அலுவலகத்திற்கு இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# சின்னஞ்சிறு செய்திகள்

## சாரணர் பயிற்சி

நாளை மாலை 3.00 மணிக்கு சாரணத் தலைவர்களுக்கான பயிற்சி ஒன்று மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

சனிக்கிழமை காலை 8.00 மணி முதல் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிவரை சாரணர்களுக்கான பயிற்சிகள் நடைபெறவுள்ளன. அத்துடன் சனி காலை 8.00 மணிமுதல் மாலை 4.00 மணி வரை அறுவர் தலைவர் பயிற்சியும் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் தவறாது கலந்துகொள்ளுமாறு சாரணர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

## சுயதொழில் கடன்வழங்கும் நிகழ்வு

இன்று காலை 10.30 மணிக்கு யாழ். குடும்பப் புனர்வாழ்வு நிலையத்தில் போரினால் கணவனை இழந்த குடும்பத் தலைவிகளுக்கான சுயதொழில் கடன் வழங்கும் வைபவம் நிகழவுள்ளதாக நிலைய இணைப்பாளர் தெரிவித் தார்.

இந்த நிலையம் 18, கோவில் வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மின்கம்பம் பற்றாக்குறை மின் விநியோகம் பாதிப்பு

மின்கம்பங்கள் பற்றாக்குறையினால், மின் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளதாக மின்சாரசபை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- கிராமப் பகுதிகளில் திருட்டு மின்பாவனை அதிகரித்துள்ளது. இவர்களில் பெருமளவானோர் மின்சாரத்துக்கு விண்ணப்பித்துவிட்டு காத்திருக்கின்றனர். எனவே, சட்டவிரோதமாக மின் இணைப்புப் பெறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கமுடியாதுள்ளதாகவும் தெரிவித்தார்.

(111)

## மகாபொலக் கொடுப்பனவு வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கலை, விஞ்ஞான மற்றும் விவசாய பீட மாணவருக்கான மகாபொலக் கொடுப்பனவுகள் - யாழ். பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் வழங்கப்படுகின்றன.

விஞ்ஞானபீட அனைத்து வருட மாணவர்களுக்கும் ஏனைய பீடங்களின் இரண்டாம் வருட மாணவர்களுக்குமே மகாபொலக் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

## இரதோற்சவம்

(வண்ணை)

வண்ணை கிழக்கு கலட்டி கற்பக விநாயகர் ஆலய இரதோற்சவம் எதிர்வரும் 13 ஆம் திகதியும் மறுநாள் தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளது. கிரியைகள் சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் தலைமையில் இடம்பெறுகின்றன. (111)

## பயிற்சிப் பாசறை

(வண்ணை)

மக்கள் நலன்புரிச் சங்கமும், படையணிகளும் நடத்தும் மாவட்ட ரீதியிலான பயிற்சிப் பாசறை இன்று முதல் தொடர்ந்து மூன்று நாட்களுக்குச் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் இடம்பெறவுள்ளதாக சங்கத்தின் மேலதிக ஆணையாளர் பி.சஞ்சித்குமார் தெரிவித்தார்.

இந்தப் பாசறையில் 30 இற்கும் அதிகமான பாடசாலைகள் பங்குபற்றவுள்ளன. இந்த நிகழ்வில் குழு, தனிநபர் போட்டிகள், பாசறை நிகழ்வு, கூடாரம் அமைப்பு, உடற்கல்விப் போட்டிகள் போன்றன நடத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (111)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்
ஒன்பதாவது அகவையில்



பெயர் : இ.ஹம்ஸலா
முகவரி : மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :----------
முகவரி :----------
பிறந்த ஆண்டு:----------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
----------
பெற்றோர் ஒப்பம்


# மீனவர்களின் இழுவைப் படகின் அத்துமீறலினால் வலைகள் பாரிய சேதம்

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பூநகரி கடற்பிரதேசத்தினுள் - யாழ்ப்பாணம் - பாஷையூர், குருநகர்ப் பகுதி மீனவர்களின் இழுவைப் படகுகளின் அத்துமீறலினால் பூநகரி பகுதி மீனவர்களின் வலைகள் பாரிய சேதத்திற்கு உள்ளாக்கப்படுவதாகவும், கடல் வளங்கள் அழிக்கப்படுவதாகவும் - இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் யாழ். மாவட்ட அரச அதிபரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினர், பாஷையூர் குருநகர் மீனவர்களின் அத்துமீறல் நடவடிக்கை சம்பந்தமாக, கிளிநொச்சி அரச அதிபரிடம் சுட்டிக்காட்டியதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (122)



யாழ்.மாநகரசபைக்கு நோராட் நிறுவனத்தால் வழங்கப்பட்ட உழவு இயந்திரங்களுக்கான ஆவணங்களை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் யாழ்.மாநகர சபை ஆணையாளரிடம் வழங்குவதைக் காணலாம்.





யோகநாதன்

# இரசாயனம் கலந்த உரவகைகள்

விளையாட்டு அரங்க வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்த கந்தப்பிள்ளை யோகநாதன் வயது - 43 என்பவரது வீட்டிற்கு ஒற்றையடிப்பாதை வழியே சென்றபோது, இடப்பக்கமாகக் கொத்தி மண்ணினைப் பதப் படுத்தி பயிர்ச்செய்கைக்குத் தயாராக இருந்தது. அதையும் தாண்டிச் சென்றபோது வாழைத்தோட்டம் வரிசைப்படுத்தி நிற்க உள்நுழைந்தேன். தொழில் சம்பந்தமாக நேர்காணல் ஒன்றிற்காக வந்தததை அறிந்ததும், எந்தவித சலனமுமின்றி உரையாடினார்.

அந்தக்காலத்து விவசாயத்திற்கும், இன்றைய காலத்து விவசாயத்திற்கும் நிறைய வித்தியாசம் இருக்கின்றன. அதாவது அன்றைய காலத்து விவசாயத்தில் நிலத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, அதற்குத் தேவையான இயற் கையாகக் கிடைத்த உரவகைகளைப் பயன்படுத்தி விவசாயம் செய்வார்கள். காவிளாய் என்ற செடிகளைத்தான் கூடுதலாக நிலத்திற்கு உரமாகப் பயன்படுத்துவார்கள். இது மண்ணிற்கு சிறந்த உரமாகும். பயிர் வளர்ச்சிக்கு சிறந்ததாகும். இப் பொழுது காவிளாய் செடி குறைவாக இருப்பதால், யாரும் பயன்படுத்துவது இல்லை. அந்தக்காலத்தில் பயிர்ச் செய்கையில் கிடைத்த உணவுப்பொருட்கள் - மனிதனின் உடலுக்குச் சத்தாகவும், எந்தவித நோய்களும் இல்லாமல் ஆரோக்கியமாக வாழக்கூடியதாக இருந்தது.

வட்டுக்கு வீடு எல்லோரும் விவசாயம் செய்ததால், அந்தக் காலத்தில் எந்தவிதக் குறைவும் இருக்கவில்லை. உணவுக்குத் தட்டுப்பாடும் ஏற்படவில்லை. வெளியே சென்று கடைகளிலே காய்கறிகளையும் அரிசியையும் வாங்கவேண் டிய தேவை ஏற்படவில்லை.

இன்றைய காலத்தில் விவசாயி பெரும் பிரச்சினைக்கு உள்ளாக்கப்பட்டு வருகிறான். இரசாயனம் கலந்த உரவகை களைக் கூடுதலாக விவசாயத்திற்குப் பயன்படுத்துவதால், மண் பாதிக்கப்பட்டு வருகின்றது. இதைப் பார்க்கின்றபோதே தெரிகின்றது. அதாவது குறைவான விளைச்சல் இதற்கு ஓர் உதாரணம் ஆகும். யாழ்ப்பாணத்து தென்னைமரங்களை எடுத்துக்கொண்டால் - காய்களின் அடிப்பாகத்தில் ஒருவித நிறமாகவும், சோம்பியும் காணப்படுகின்றது. மண்கெட்டுப் போவதால்தான் தென்னை வளர்ச்சியும் குறைவாக இருக் கின்றது. இருக்கின்ற தென்னைகளும் பட்டுப்போகின்றது. இதறகுக் காரணம் - இரசாயனம் கலந்த உரவகை மட்டுமல்ல, மண்ணுக்கு ஓய்வு கொடுப்பதுமில்லை. ஒரு பயிரினை பயிரிட்டு பயனை எடுத்துவிட்டால், சிறுதுகாலப்பகுதி நிலத்திற்கு ஓய்வு கொடுக்கவேண்டும். இதனை யாருமே செய்வதில்லை. அதாவது, வெங்காயம் வைத்துவிட்டுப் பிடுங்கியதும் உடனே வேறு பயிர்ச்செய்கையில் ஈடுபடுவார்கள.

இன்று யாரைப் பார்த்தாலும் நோய்கள் உள்ளவர்களாகத் தான் இருக்கிறார்கள். இதற்கு எங்களுடைய உடலில் உட் செல்லும் உணவுதான் முதற்காரணம். நான் முதலில் புகை யிலையைப் பயிரிட்டு வந்தேன். அப்பொழுது எங்களுடைய ஊரிலே சுருட்டுக் கம்பனிகள், கடைகள் இருந்ததால் விற்கக் கூடியதாக இருந்தது. வெளியிடங்களுக்கு அனுப்பவேண்டிய தேவை இருக்கவில்லை. இப்பொழுது புகையிலையைப் பயிரிட முடியாதநிலையுள்ளது. ஏனென்றால், குருமண் நோய் ஏற்படு கின்றது. இதனால் மண் பழுதாகிவிட்டது. புகையிலையைப் பயிரிடுவதைக் கைவிட்டுவிட்டேன். விவசாய ஆராய்ச்சியாளர் கள் சொல்கிறார்கள் சூடுதான் காரணமென்று.

இப்பொழுது நான் ஒருபோகம் வெங்காயம் பயிரிடுகின் றேன். பங்குனி, சித்திரை மாதங்கள்தான் இதற்குத் தகுந்த காலமாகும். ஏனெனில், வெயில் காலம்தான் வெங்காயப் பயிருக்கு உகந்தது. என்னவாக இருந்தாலும் மண்ணிற்கு வித்தியாசம் இருக்கின்றது. நுகர் வோரும் அந்தந்தப் பொருளை, ஊருக்கே ஏற்ற மாதிரித்தான் கொள்வனவு செய்வார்கள். அதாவது தம்பசிட்டி மண் - வெங்காயச் செய்கைக்கு சிறந்த தாகும். இதனால் தம்பசிட்டி வெங்காயம் என்றதும் நுகர்வோர் அடிபட்டுவாங்குவார்கள். நாங்கள் பயிரிட்ட வெங்காயத்திற்கு கேள்வி குறைவுதான். அவர்கள் ஒருகாலப் பகுதியில் பயிரிடு வார்கள். நாங்கள் ஒரு காலப்பகுதியில் பயிரிடுவோம். இதனால்

# மண்ணிற்குத் தீங்கினை விளைவிக்கின்றது

ஒரு இலாபம். வெங்காயத்தையும் விற்கக்கூடியதாக இருக்கின் றது.

ஆனாலும், தம்பசிட்டி மண்ணில் விளைந்த வெங்காயத் திற்கும் எங்களுடைய மண்ணில் விளைந்த வெங்காயத் திற்கும் நிறைய வித்தியாசம் இருக்கின்றன. பார்க்கின்றபோது எல்லோருக்கும் வித்தியாசம் தெரியும்.

மூன்றரைப் பரப்பில் வாழைத்தோட்டம் வைத்திருக்கின் றேன். கதலிதான் பயிரிட்டிருக்கின்றேன். இதனாலும் உழைக் கக்கூடியதாக இருக்கின்றது. ஆனாலும் வாழைக்கு நீர்வேலி வாழைக்குலை என்றால் - நுகர்வோர் அடிபட்டுவாங்குவார்கள். எங்களுடைய மண்ணில் விளைந்த வாழைக்குலை என்றால் கேள்வி குறைவாகத்தான் இருக்கும். யாழ்ப்பாணத்துக் கப்பல் வாழைக்குலைக்கு ஏதோ நோய் ஏற்படுகின்றது. நானும் வைத் துப்பார்த்தேன் சரிவராமல் போனது.

வெங்காயத்தினை பயிரிட்டு கொழும்புக்கு அனுப்புகின் றேன். கொழும்பில் இருந்தும் கொள்வனவு செய்வதற்கு வருகின்றார்கள். வீட்டிலேயே வைத்துப்மொத்தமாகக் கொடுக் கக்கூடியதாக இருக்கின்றது. இதனால், வேலை குறைவாக இருக்கின்றது.

நாங்கள் வைத்திருந்து, யாழ்ப்பாணத்தில் விற்க வெளிகிட் டால், கஷ்டமாக இருக்கும். தமிழனைப் பார்த்து தம்புல்ல, குறுநாகல் சிங்களவர்களும் வெங்காயம் பயிரிட ஆரம்பித் துவிட்டார்கள். இதனால், எங்களுடைய வெங்காயத்தைக் கொழும்புக்குக் கொண்டுசென்று விற்பனை செய்வதற்குப் பல நாட்கள் இப்போது ஏற்படுகின்றது.

கொழும்பிற்கு அனுப்புவதால் யாழ்ப்பாணத்தில் வெங்கா யம் குறைவடையும் என்றில்லை. இங்கே போதியளவு இருக் கின்றது.

வெங்காயம் நடும்போது, பக்கத்தில் மரவள்ளியும் நட்டு விடுவேன். வெங்காயம் கிண்டும்போது, மரவள்ளியும் கணக் காக வளர்ந்து வந்துவிடும். இதனால், இரண்டு இலாபத் தினைப் பெறுகின்றேன்.

வெங்காயம் நட்டு பிடுங்கும் தருணத்தில் மழைவந்து அழிந்துபோனதால், இதில் எனக்கு 30 ஆயிரம் ரூபா நட்டம் ஏற்பட்டது. அடுத்ததாக வெங்காயம் பிடுங்கும் தருணத்தில் பூச்சியும் அரிக்கக்கூடும். இதனால் விளைவுகள் ஏற்பட வாய்ப்பும் உண்டு.

எனக்கு மூன்று பெண் பிள்ளைகள். வீட்டிலே விவசாயம் தொழிலாக அமைந்ததால், எல்லோரும் சேர்ந்து செய்வதால் எனக்குப் பாரமாக இருக்கவில்லை. அதேவேளை தொழிலைத் திறம்படச் செய்யக்கூடியதாகவும் இருக்கின்றது.

வெளிநாட்டில் சென்று என்னதான் உழைத்தாலும், நிறை யப் பணம் வந்தாலும் விவசாயம்போல் ஆகுமா.

தொழில்களில் சிறந்ததொழிலாக விவசாயம் அமைவதால் - எல்லோரும் இந்தத் தொழிலினை ஏற்கும் காலம் மிக விரைவில் வருமென எதிர்பார்த்து இருக்கலாம் எனச் சொல்லி முடித்தார். நானும் நிறைவான ஒரு நேர்காணலை எடுத்த மகிழ்ச்சியுடனும், விவசாயத்தைப் பற்றி அறிந்த திருப்தி யுடனும் விடைபெற்று வந்தேன்.

**நேர்காணல் - செல்வா.**

# சிறுதொழில்களுக்கு அரசாங்க கடனுதவி பெறுவது எப்படி...?

சிறுதொழில்களை நடத்த முற்படுகின்ற தகுதியுடைய ஆட்களுக்கு இந்தக் காலத்தில் அரசாங்கம் கடனுதவி தருகின்றது. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளும் கடனுதவி அளிக்கின்றன. தகுதியுடையவர்கள் தகுந்த நடைமுறைக ளைப் பூர்த்திசெய்து, கடனுதவி பெற்று, சிறுதொழில்களைத் தொடக்கிப் பணம் சம்பாதிக்கலாம். இவ்வாறு கடனுதவி பெறுவதற்கான சில பொதுவான தகவல்களை வழிகாட்டி முறை என்ற நோக்கில் இங்கு தருகிறோம்.

திட்டவட்டமான தகவல்களை - விபரங்களை, அரசு தொடர்புடைய கடனுதவி நிறுவனங்கள் அல்லது வங்கிகளு டன் தொடர்புகொண்டு, திட்டவட்டமாகப் பெறலாம்.

சிறு தொழில்கள் யாவை என்பது குறித்துப் பொதுவான சுருக்கமான விளக்கத்தை மட்டும் இங்கு தருகிறோம். நகரங்களிலோ, பெரிய கிராமங்களிலோ அதிக மூலதனத்தை முடக்காதபடி செய்யப்படும் சிறுதொழில்கள் அனைத்துமே இந்தத் தலைப்பின் கீழ்வரும்.

நவீன தொழில்நுட்ப நடைமுறைகளைக் கையாண்டு மின் சக்தியின் துணையுடன், சிறிய ரக இயந்திரங்களின் உதவியுடன் இயக்கப்படுவனவெல்லாம் சிறுதொழில் எனக் குறிப்பிடலாம். சிறுதொழில்மூலம், முழுமையான சில பண்டங் கள் உற்பத்தி செய்யலாம்.

சிறுதொழில் மூலம் பெரிய தொழில்களுக்குத் தேவையான சில உதிரிப்பாகங்களையும் செய்தளிக்கலாம்.

## கடன்கள் எதற்காக வழங்கப்படுகின்றன?

தொழில்கள் ஆரம்பிப்பதற்கான கட்டடம் அல்லது நிலம் வாங்குவதற்கென்று கடன் தரப்படும். தொழிற்சாலைகளைக் கட்டமைப்பதற்காகவும் கடன் தரப்படும். இயந்திர சாதனங் கள் வாங்குவதற்கென்று, கடன் தருவார்கள். தொழிலுக்குத் தேவையான மூலப்பொருட்கள் வாங்குவதற்கெனவும் கடன் கோரலாம்.

முன்னரே நடைபெற்றுக்கொண்டிருக்கும் தொழிலில் கடன் இருந்தால், அந்தக் கடனை அடைத்தால் மீண்டும் தொழில் கடன் கேட்கலாம். சக்திக்கு மீறிய காரணங்களால் தொழில் நட்டம் அடைந்திருந்தால், தொழிலை மறுபடி நிர்மாணம் செய்வதற்கென்று கடன் கேட்கலாம்.

# தொழில் வங்கி



| நிறுவனம் | வெற்றிடமாகவுள்ள பதவிகள் | அடிப்படைத் தகுதி | முடிவு திகதி |
|---|---|---|---|
| ருகுணு பல்கலைக் கழகம் வெல்லம்மடம மாத்தறை. | ஆங்கில வருகை விரிவுரையாளர் | ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்ட பட்டம் அல்லது பயிற்றப் பட்ட ஆங்கில ஆசிரியர்கள் 65 வயதிறகு மேற்படலாகாது | 15.04.2004 |
| கிழக்குப் பல்கலைக்கழகம் வந்தாறுமூலை செங்கலடி. | 01. சிரேஷ்ட விரிவுரையாளர் (புள்ளிவிபரவியல்)<br>02. தற்காலிக உதவி விரிவுரை யாளர். (கணினி)<br>03. சிரேஷ்ட விரிவுரையாளர் (இஸ்லாமிய நாகரிகம்)<br>04. சிரேஷ்ட விரிவுரையாளர் (பொருளியல்)<br>05. தாதிய உத்தியோகத்தர். | விண்ணப்பப் படிவத்தில் | 24.04.2004 |
| மகா பொறியியல் நிறுவனம் 200, நாவலறோட் நாரேன் பிட்டிய, கொழும்பு - 05 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | வயது 18 - 25 நுண்ணிய ஆங்கில அறிவு, கணினி அறிவு, சந்தைப்படுத் தல் தொடர்பான அனுபவம் மேல திக தகைமையாகக் கணிக்கப்படும். | 11.04.2004 |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப் பெறவிரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

# நீர் வளங்கள் போதியளவு இருந்தும் வினைத்திறனான பயன்பாடு எட்டவில்லை

(சென்றவாரத் தொடர்ச்சி...)

**பதப்படுத்தலும், சந்தைப்படுத்தலும்**

அநேகமான நன்னீர் மீன் எந்தவித பதப்படுத்தலும் இன்றி நேரடியாக விற்பனை செய்யப்படுகின்றன. எனினும், பெருமளவில் மீன்கள் அறுவடை செய்யப்படின் அவை பல் வேறு வகைகளில் பதப்படுத்தலிற்கு உட்படுத்தப்படலாம். (கருவாடாக்கல், புகையிடல், மாசிக் கருவாடாக்கல், தகரத்தில் அடைத்தல், மீன் எண்ணை தயாரித்தல்).

யாழ்.குடாவின் பெரும்பாலான உவர்நீர் நிலங்களில் இன்று நெற்செய்கை நடைபெறுவதில்லை. இந்த நிலங்கள் தரிசு நிலங்களாகவே விடப்பட்டுள்ளன. இவ்வாறான 300 ஏக்கர் நிலம் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர்



பிரிவில் மாத்திரம் உள்ளது. இவற்றை இந்த நீரில் வளர்ப்பிற்கு உட்படுத்தலாம்.-

**நீரின் வளர்ப்பும் எதிர்காலமும்**

உலகநாடுகளில் இன்று பிரசித்திபெற்ற தொழிலாகவும், வர்க்கவேறுபாடின்றி, எல்லோராலும் மேற்கொள்ளப்பட்டு, மக்களுக்குத் தேவையான புரத உணவு வழங்கல நிலைதது நிற்கக் கூடியவகையில் - எதிர்காலச் சந்ததியும் பயன்படுத்தும் வகையில் இந்த நீரில் வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. ஆனால், எமதுநாட்டில் குறிப்பாக எமது வடக்குப் பிரதேசத்தில் இந்த நீரில் வளர்ப்பு தொழில் மேற்கொள்ளப்படவில்லை. ஆகவே, இந்தத் தொழிலை மக்களிடையே தெளிவுபடுத்தும் முகமாகவும், இதனை யாழ். குடாநாட்டில் மேற்கொள்ள முயற்சியுள்ளவர்களுக்கு, இந்தக் கட்டுரை தூண்டுதலாக அமையும் என்றவகையில் என்னால் இந்தக் கட்டுரை தொகுக்கப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டின் 1940 ஆம் ஆண்டுகளில் - பாலசிங்கம் என்பவரால் (நாடாளுமன்ற உறுப்பினர்) இந்தத் தொழில் பற்றிய திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டது. 1948 ஆம் ஆண்டளவில் வெப் (WEB) என்பவரால் தொண்டமானாறு கடல் நீரேரியை நன்னீர் ஆக்கும் திட்ட அறிக்கை ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டதுடன், இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

3000 ஏக்கர் தரவை நிலங்கள் நன்னீர்ப் பயிர்ச் செய்கை நிலங்களாக மாறும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. இந்தத் திட்ட நடைமுறையின் பயனால் அடுத்த சில வருடங்களில் கரணவாய் உவரற்ற நிலமாக மாறியது. அத்துடன், ஆவரங்கால் பிரதேசத்திலுள்ள தரவை நிலங்களும் தோட்ட நிலமானது. எனினும், இந்தத் திட்டம் - நடைமுறைப்படுத்தபட்ட காலத்தில் தொண்டமானாற்றை அண்டிய பகுதிகளில் இறால் பிடித்தலும் செம்மணிப் பகுதியில் உப்பு விளைவும் பாதிப்பிற்குள்ளானது. இதனால், சமூகப் பொறுப்பற்ற சுயநல சிந்தனையுள்ள சிலரால், தொண்டமானாறு கடல்நீர் ஏரியை நன்னீரேரியாக மாற்றுவதற்காக அமைக்கப்பட்ட கதவுகள் உடைக்கப்பட்டன. இதன் காரணமாகக் கடல் நீர் உட்புகுந்து, நிலப்பகுதியினுள் தேக்கமடைந்து, தொண்டமானாற்றை அண்டிய பகுதியெங்கும் பயிர்செய்யமுடியாத உவர் நிலமாக மாறியது.

முன்னர் ஆரம்பிக்கப்பட்டு, கைவிடப்பட்ட இந்த நீர்த் திட்டங்கள், மீண்டும் முன்னெடுக்கப்பட்ட நடைமுறைப்படுத்தவேண்டியுள்ளதுடன் - தொண்டமனாறு, உப்பாறு போன்றவற்றில் பொருத்தமான நீர்க்கட்டுப்படுத்தும் கதவுகளை அமைத்து அந்த ஏரிக்குப் பொருத்தமான நீர் வாழ் உயிரினங்களின் இளம் நிலைகளை தொண்டர் ஸ்தாபனங்கள் கூட்டுறவு சங்கங்களுக்கூடாக வைப்பிட்டு அனுமதி முறைக்கூடாகக் குறித்தகால இடைவெளிகளில் அறுவடை மேற்கொள்ளவேண்டும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பண்ணை முறையில் இறால், மீன் வளர்ப்புக்குப் பொருத்தமானதாக 17 ஆயிரம் ஹெக்ரேயர் நிலப்பரப்பு அரியாலை, கல்லுண்டாய், வல்லைவெளி போன்ற இடங்களில் காணப்படுகின்றது. இவற்றை பொருத்தமான வகையில் பயன் பாட்டிற்கு உட்படுத்தல்வேண்டும்.

நீரில் வளர்ப்பை மிகச் சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு அதனுடன் இணைந்த பின்வரும் உட்கட்டுமான நடவடிக்கைகளையும் அபிவிருத்தி செய்தல் அவசியமாகும்.

1. குடம்பிகள், குஞ்சுகள் என்பனவற்றை வழங்குவதற்கான குஞ்சு உற்பத்தி நிலையங்களும், ஆய்வு கூடங்களும் நிறுவுதல்

2. பொருத்தமான உணவுகளை தயாரிக்கும் இறக்குமதிசெய்யும் நிலையங்கள் அமைத்தல்.

3. நீருக்கு ஒட்சிசன் ஏற்றும் கருவிகள் வளியூட்டும் கருவிகள், பல்வேறுபட்ட நீரிறைக்கும் கருவிகள், தொற்று நீக்கும் உபகரணங்கள், சந்தைப்படுத்தல் தொடர்பான அமைப்புக்களை உருவாக்குதல்.

4. நீர் முகாமைப்படுத்தலுக்கு உதவும் உபகரணங்காளான PH மானி, நீரில் ஒட்சிசனை அளவிடும் கருவி வெப்பமானி மற்றும் நீரைப்பகுத்தாயும் கருவிகளையும், இது தொடர்பான சேவைகளையும் வழங்கும் அமைப்புக்களையும் எற்படுத்துதல்.

5. தடாகம் அமைப்பதற்கான இயந்திரங்கள், வலைகள், கூடுகள் விசேட உபயோகத்திற்கான படகுகள் மற்றும் ஏனைய தேவைகளுக்கான உபகரணங்களையும், சேவைகளையும வழங்கும் நிறுவனங்களை உருவாக்குதல்

6. நீரில் வளர்ப்பு உயிரினங்களை நோயிலிருந்து பாதுகாப்பதற்கான நீரில் மருத்துவத்துறை அவற்றுக்கான நோய் அறிகாரணிகள், நீர் மருந்துகள், தொற்று நீக்கிகள், நோய் அடையாளம்காணுதல் நடவடிக்கைகள் என்பவற்றை சிறப்பான முறையில் இந்தத் துறையில் நிபுணத்துவம் பெற்ற நிபுணர்களின் தலைமையில் நிறுவுதல்.

7. நீர் வளர்ப்பு துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களைக் கொண்டு, நீரில் வளர்ப்புக்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும், ஆலோசனைகளையும் வழங்கும் நிறுவனங்களை உருவாக்குதல்.

8. நீரில் வளர்ப்பு தொழிலை தொடங்குபவர்களுக்கான - முதலீட்டு வசதிகளையும், கடனுதவிகள், மானியங்கள், காப்புறுதி வசதிகள் என்பனவற்றை அரச அனுமதியுடன் வழங்குதல்.

ஒரு பிரதேசத்தில் காணப்படும் வளங்களை நன்கு திட்டமிட்ட முறையில் முகாமைப் படுத்தலுக்கூடாகப் பயன்படுத்தப்படுவதன்மூலம், அபிவிருத்தியையும், சுபீட்சத்தையும் ஏற்படுத்துவதில் அங்குள்ள உயர் கல்வி நிறுவனங்களின் பங்கு மிக முக்கியமானதாகும். அந்தவகையில் எதிர்காலத்தில் யாழ்.குடாநாட்டில் நீரில் வளர்ப்பு தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கைகள், அபிவிருத்திகள், அதன் சிறப்பான எதிர்காலம் என்பவற்றுக்குப் பல்கலைக்கழகம் காத்திரமான பங்கை வழங்கும் என்பதற்கு அதன் அண்மைக்கால நடவடிக்கைகளான யாழ். பல்கலைக்கழகத்தில் ஒரு நீரியல்வள பீடத்தை உருவாக்குவதற்கான அடித்தளமாகக் கடல்வள அபிவிருத்தி நிலையத்தை அமைத்தமை, அதனூடாக டிப்ளோமாக் கல்வியும் அந்தக் கல்வியின் பயனாக இன்று யாழ்.குடாநாட்டில் உள்ள பாடசாலைகளில் கடல்வளப் பாடம் கற்பிக்கப்படுகின்றமை சான்றுபகிர்கின்றன.

'நீருள்ள இடமெல்லாம் மீன் வளர்' என்ற சீன மொழிக்கிணங்க யாழ்.குடாநாட்டின் பொருத்தமான எல்லா நீர் நிலையங்களையும் நீரில் வளர்ப்பிற்கு உட்படுத்தப்படுகின்றபோது, யாழ்.குடாநாடு இன்றுள்ள பல உணவுப் பொருளாதாரப் பிரச்சினைகளிலிருந்து விடுதலையடையும்.

எவ்வாறாயினும், நீரில் வளர்ப்புத்துறையின் எழுச்சிக்கும், விருத்திக்குமான ஆரம்பத் திட்டமிட்ட நடவடிக்கைகளுக்குப் பெருமளவு மூலதனம் தேவைப்படுவதால், யாழ். குடாநாட்டின் நீரில் வளர்ப்புத் திட்டமிடல் சுதந்திரமான அரசியற் கொள்கை திட்டங்களுக்கூடாக மேற்கொள்ளப்படும்போதே, அது நடைமுறைச் சாத்தியமாக அமையும்.

எனவே, நீர் வளர்ப்புக் கைத்தொழில் விருத்தியானது தனியே நீரில் வளர்ப்பு நிபுணர்களின் சேவை மட்டுமல்லாது அரசியலாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள், முதலீட்டாளர்கள், பொறியியலாளர், புவியியலாளர்கள், குடிமக்கள் போன்ற எல்லாத் தரத்தினரினதும் உழைப்பால் உருவாக்கப்பட வேண்டிய ஒன்றாகவுள்ளது.

இன்று சர்வதேச போட்டியை எதிர்நோக்கும் நீரில் வளர்ப்புக் கைத்தொழிலில் வரும் ஆண்டுகளில் நாமும் இணைந்து கொள்ள - இன்றே இந்தத்துறை பற்றி எல்லோரும் சிந்திக்கவேண்டும் என் பது தெளிவாகும். (முற்றும்)

வ.ஸ்ரீதரன்

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | நெல்லியடி | சங்கானை | சாவகச்சேரி | பருத்தித்துறை |
|---|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 30/= | 40/= | 50/= | 30/= | 20/= | 25/= | 30/= | 30/= |
| வெண்டிக்காய் | 20/= | 20/= | 25/= | 18/= | 35/= | 15/= | 30/= | 30/= |
| உருளைக்கிழங்கு | 60/= | 65/= | 70/= | 65/= | 70/= | 50/= | 70/ | 65/= |
| கத்தரிக்காய் | 20/= | 20/= | 15/= | 25/= | 15/= | 20/= | 20/= | 15/= |
| பாகற்காய் | 60/= | 40/= | 40/= | 50/= | 40/= | 40/= | 40/= | 40/= |
| கரட் | 30/= | 25/= | 30/= | 25/= | 40/= | 35/= | 40/= | 30/= |
| பீற்றூட் | 10/= | 10/= | 10/= | 15/= | 15/= | 10/= | 10/= | 15/= |
| முருங்கக்காய் | 80/= | 100/= | 140/= | 100/= | 80/= | 90/= | 120/= | 40/= |
| வெங்காயம் | 30/= | 35/= | 35/= | 30/= | 35/= | 25/= | 35/= | 25/= |
| பச்சை மிளகாய் | 30/= | 30/= | 30/= | 35/= | 30/= | 30/= | 40/= | 30/= |

# நவீன விவசாய முறைகள்

வளர்ச்சியடைந்த நாடுகளைப் பொறுத்தவரையில், விவசாயம் என்பது விஞ்ஞானத்தின்பாற்பட்டதாகவே கணிக்கப்படுகின்றது. ஆனால், எமது நாட்டைப் பொறுத்தவரையில் விவசாயம் என்பது விஞ்ஞானம் என்றவகையில் நோக்கப்படும் தன்மை குறைவாகவே காணப்படுகின்றது. விஞ்ஞானம் என்பது-ஆராய்ச்சிக்குட்படுத்தப்பட்டு புதிய கண்டுபிடிப்புக்களை வெளிக்கொள்வதாகவே அமைகின்றது.

குடாநாட்டைப் பொறுத்தவரையில் விவசாயமானது விஞ்ஞானத்தின்பாற்படவில்லை என்றே கூறலாம். நாம் தொனறு தொட்டு பேணப்பட்டு வரும் பழமை வாய்ந்த முறைமைகளையே விவசாயத்தில் கையாண்டு வருகின்றோம்.

இந்தவகையில் அண்மைக்காலத்தில் திருநெல்வேலி விவசாயக் கல்லூரியினால் அறிமுகப்படுத்தப்பட்ட, பாதுகாக்கப்பட்ட விவசாயமுறை மிகவும் பயனுள்ள ஒன்றாகக் காணப்படுகின்றது.

பாதுகாக்கப்பட்ட விவசாயமுறையென்பது, குறிப்பிட்ட கட்டுப்பாட்டுச் சூழலை உருவாக்கி பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளுதலாகும்.

இந்தமுறையில் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளும்போது, குறிப்பிட்ட பருவகாலத்திற்கு உரிய பயிர் வகைகளை ஏனைய காலப்பகுதியிலும், பயிரிடமுடியும். இதனால் நுகர்வோரும், உற்பத்தியாளர்களும் கூடிய நன்மைகளைப் பெறக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. இதே சமயம் இத்தகைய விவசாய முறையானது, சூழலிற்கு பெருமளவு பாதிப்பை ஏற்படுத்துவதில்லை.

இதேபோன்று அண்மைக் காலத்தில் விவசாய ஆராய்ச்சி நிறுவனத்தினரால் பூச்சிய தரைப் பண்படுத்தல் முறை என்கிற புதியமுறை ஒன்றும் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. அதாவது, தரையை எவ்வித பண்படுத்தலுமின்றி சோளம் முதலியவற்றை பயிரிடுவதாகும். இந்தப் பயிர்ச்செய்கைமூலம் மனித ஊழியம் மட்டுப்படுத்தப்படுகின்றது.

இதேபோன்று புதிய நீர்ப்பாசன முறைகளில் ஒன்றான தூறல் நீர்ப்பாசன முறையும் அறிமுகப்படுத்தப்பட்டு வெற்றி காணப்பட்டுள்ளது. தூறல் நீர்ப்பாசன முறையின் கீழ் மிளகாய், வெங்காயம், கரட், பீற்றூட் பயறு போன்ற பயிர்கள் பயிரிடப்பட்டு உச்சப் பயன்பாடு பெறப்பட்டுள்ளன. தூறல் நீர்ப்பாசன முறையினால் பல்வேறு பயன்பாடுகள் கிடைக்கப் பெறுகின்றன. தூறல் முறையில் நீர்ப்பாசனத்தை மேற்கொள்வதால் கிருமிநாசினிகளை பயன்படுத்த வேண்டிய தேவை அற்றுப் போகின்றது.

ஏனெனில், நீர்ப்பாசனமானது தூறல் முறையில் மேற்கொள்வதால் பயிர்களிடையே பூச்சிகள் வாழ்வதற்கான சூழல் மட்டுப்படுத்தப்படுகின்றது. இதேசமயம் ஒரு பம்பியின்மூலம் தூறல் நீர்ப்பாசனத்தை மேற்கொள்வதால் மனித உழைப்புக்கான செலவு குறைகின்றது.

ஆனாலும், இந்த நவீன தொழிநுட்ப முறைகள் விவசாயிகளை முழுமையாகச் சென்றடையவில்லை. இவை தொடர்பான தொழிநுட்ப அறிவு - விவசாயிகளுக்கு வழங்கப்படுமானால் எமது குடாநாட்டு விவசாயத்துறை பெரும்வளர்ச்சி அடையும் என்பதில் சந்தேகம் இல்லை.

- லெஸ்லி -

அரசியல் கண்ணோட்டம் — ஆதி

# புது வருடமும் இலங்கைத்தீவில் ஏற்படும் புதிய நெருக்கடிகளும்

இலங்கைத் தீவின் பதின்மூன்றாவது நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் பலத்த ஆரவாரங்களுடனும், எதிர்பார்ப்புக்களுடனும் நடைபெற்று முடிந்தது. தேர்தல் ஆணையாளர், பொலிஸ்மா அதிபர் தங்கள் காலத்திலேயே இலங்கை வரலாற்றில் நியாயமாகவும், நல்லமுறையிலும் தேர்தல் நடந்ததாகத் திருப்தியடைந்துள்ளனர்.

மறுபுறத்தில் தோல்வியடைந்த அரசியல்வாதிகள் - தேர்தல் நியாயமற்றது என்று தலையில் அடித்துக் கொள்கின்றனர். எது எப்படியாயினும் இனிவரப்போகும் புதுவருடம் பல்வேறு வரலாற்று மாற்றங்களைச் சந்திக்கத்தயாராகிறது.

### ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி

நூற்று ஐந்து நாடாளுமன்ற ஆசனங்களை மட்டும் வைத்துககொண்டு, சிறுபான்மைக்கட்சிகள் சிலவற்றின் ஆதரவுடன் ஆட்சியமைக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கூட்டு - நாட்டின் நலனுக்கும் எதிர்காலத்திற்கும் எவ்வாறு அமையும் என்பது தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அச்சவுணர்வை ஏற்படுத்தியுள்ளது.

இந்தக் கூட்டிலுள்ள ஜே.வி.பி - தமிழ் மக்கள் விடயத்தில் கொண்டுள்ள நிலைப்பாடு மிகவும் மோசமானது. அவ்வாறான ஜே.வி.பியின்ருக்கு முக்கியமான பல அமைச்சுக்களும், பிரதி அமைச்சுக்களும் வழங்கப்படவுள்ளது.

தேர்தல் முடிவுற்ற உடனேயே ஜே.வி.பி. முக்கியஸ்தர் சந்திரசேகரன் - பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில், விடுதலைப் புலிகள்தான் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பதை தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், சகல தரப்பினருடனும் கலந்து பேசியே பேச்சுவார்த்தை முன்னெடுத்துச் செல்லப்படும் என்றும் கூறினார்.

புதிய அரசின் வெளிநாட்டமைச்சராக பதவியேற்கும் லக்ஸ்மன் கதிர்காமர் - ஈழத்தமிழர்களுக்கு உலகிலேயே மிகப்பெரிய கொடுமை செய்தவர். இலங்கை ஜனாதிபதியின் நெருங்கிய சகா. தமிழ் மக்களின் தேசிய உரிமைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தவும், நசுக்கவும் பகிரதப்பிரயத்தனம் கொண்டு செயற்பட்டவர். அத்தகையவர் தலைமையில், அரசு - தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எவ்வாறு செயற்படப்போகிறது.

### ஐக்கிய தேசிய முன்னணி

கடந்த இரண்டு வருடகாலமாக யுத்தமின்றி தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உருப்படியான தீர்வின்றி, இலங்கை அரசியல் நிலைமைகளைப் பிச்சைக்காரன் காலில் புண்ணாகப் பயன்படுத்தி, நிதி நெருககடிகளைத் தீர்த்து வந்த ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி 82 ஆசனங்களைக் கைப்பற்றிவிட்டு மௌனமாக இருக்கிறது.

கடந்தகாலத்தில் சமாதானத்தைக் கொண்டுவருவதற்குப் பாடுபட்டவராகக் காட்டிக்கொள்ளும் ரணில் விக்கிரமசிங்க - மீண்டும் எதிர்கட்சி ஆசனத்தில் அமர்ந்துகொண்டு தனது பணியைச் சரிவரச்செய்யவே முயல்வார். அதாவது இலங்கையில் எந்தக் கட்சி எதிர்க்கட்சியாக வந்தாலும், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீவுகாணும் விடயத்தில் அரசுடன் முரண்பட்ட கருத்தையே கடைப்பிடிப்பர். அத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் பற்றிய சந்தேகங்களும் யாழ்.மக்கள் மத்தியில் தலை தூக்கியுள்ளன.

### தமிழ் மக்களின் எண்ணம்

பல தசாப்தங்களின் பின்னர் தமிழ் மக்கள் இலங்கையின் நாடாளுமன்றத் தேர்தலுக்கு ஆர்வம் காட்டியுள்ளனர். இந்தத் தேர்தலில் பல வரலாற்றுச் சாதனைகளையும் ஏற்படுத்தியுள்ளனர்.

இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் தமிழ்க்கட்சி ஒன்று 22 ஆசனங்களைக் கைப்பற்றியதும் இதுவே முதல்தடவை. இது தமிழர் தாயகம், தமிழ்த்தேசியம், தன்னாட்சி அதிகாரம் என்ற கொள்கைகளுக்கான மக்களின் ஆணை. அதுமட்டுமன்றி, காலங்காலமாக ஆட்சி செய்யும் சிங்கள இனவாதிகளின் ஆட்சிகள் இனிமேலும் வெற்றியடையாது. அத்தகையவர்களின் முயற்சியை முறியடித்துப் பிரிந்துசென்று, தனியரசை அமைக்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் ஏகோபித்த நிலைப்பாடாகவுள்ளது.

### தமிழ் மக்களுக்கெதிரான சூழ்ச்சிகள்

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தமிழ் மக்களுக்கெதிராகவும், தேசிய உரிமைப் போராட்டத்திற்கெதிராகவும் பாரிய சூழ்ச்சிகளும், சதிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதனை அவதானிக்கமுடிகிறது.

அதற்கு விடுதலைப் போராட்டத்தின் எதிரிகள் மட்டுமன்றி, விடுதலைப் போரின் முக்கிய பங்காளிகளையும்கூட விலைக்கு வாங்கி உள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் கருணா தலைமையிலான விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் பலரையும், அவ்வாறே விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக்கொடுத்து வந்த சில குழுக்களையும், மூத்த அரசியல்வாதிகளையும்கூட தன்வசப்படுத்தியுள்ளது.

இந்தியா - இலங்கை நாடாளுமன்றத்தில் சில அரசியல்வாதிகளுக்கு ஆசனம் கிடைக்காமல் போவதையிட்டும்கூட இந்தியா கவலை கொண்டுள்ளது.

மொத்தத்தில் இலங்கை அரசியலில் ஏற்பட்டு வருகின்ற மாற்றங்கள்- தமிழர் தரப்பைப் பொறுமை இளக்கச்செய்து, தமிழர்கள் மீது போரைத் திணிப்பதற்கான முயற்சிகளாகவே தெரிகிறது.

அதுவே தமிழர்களின் இறுதி இலக்காக அமையும். ◆

---

மருத்துவத்துறை — எஸ்.ஜெயா

# நவீன மருத்துவ முறையை விடவும் ஆயுர்வேத முறையே சிறந்தது

**1929 இல் பிறந்த இவர் - 1956 இல் தனது பரம்பரை கண் மருத்துவத்தினை சட்டரீதியாகப் பொறுப்பேற்று, இன்று வரை சுமார் 48 ஆண்டுகள் தனது சேவையினை ஆற்றி வருகின்றார். 1980களுக்கு முற்பட்ட காலப்பகுதியில் இவரது குடியிருப்புப் பகுதி போக்குவரத்து நெரிசல் மிகுந்து காணப்பட்டது. இதற்குக் காரணம் இவரது சிகிச்சைமுறையில் மக்கள் கொண்ட நம்பிக்கையாகும். வன்செயல்களால் நோயாளர்களின் வரவு வீழ்ச்சிகண்டது. இதற்குக் காரணம் சுதேச மருத்துவத்தின் நவீன வளர்ச்சியின்மையா? அல்லது ஆங்கில மருத்துவத்தினை உள்வாங்கிய மக்களின் சிந்தனையா?**



ஆயுர்வேத நேத்திர (கண்) மருத்துவத்துறையில் சுமார் மூன்று நூற்றாண்டுகளைக் கண்ட பரம்பரைக் கண் மருத்துவர் Dr.வீ.சேனாதிராசா அவர்களை அவரது மருத்துவத்துறை தொடர்பாக கண்டும், கேட்டும், பார்த்தும், பகிர்ந்து கொணடவை.

19 ஆம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்ட இவர்களது கண் மருத்துவதுறையானது, 20 ஆம் நூற்றாண்டையும் கடந்து 21 ஆம் நூற்றாண்டில் இன்று காலடி எடுத்துவைத்துள்ளது. இலங்கையிலே பரம்பரை மருத்துவத்தில் கண் மருத்துவத்தினை விசேட துறையாகக்கொண்டு சேவையாற்றுபவர்கள் மிகக் குறைவானவர்களே. இதேபோன்று தமிழ்ப்பகுதியல் வாழைத்தோட்டத்து கண் வைதத்தியர் என சிறப்புப் பெயரால் அழைக்கப்படுபவர் Dr.வீ.சேனாதிராசாவும் அவரினது மூதாதையருமே ஆவார்.

**உங்களுடைய தந்தையார் எத்தனையாம் ஆண்டு மருத்துவத் துறைக்குள் பிரவேசித்தார்?**

எனது தந்தையார் 1880 ஆம் ஆண்டு பிறந்தார். அவர் தனது 18 ஆவது வயதிலேயே மருத்துவத்துறைக்குப் பிரவேசித்து, 1945 ஆம் ஆண்டு வரை சேவையாற்றினார். சுமார் 47 வருடங்கள் சேவையாற்றியிருக்கிறார்.

Dr.வீ.சேனாதிராசாவின் தந்தையாரான Dr.ச.வீரகத்தியார் கேள்வி ஞானம் மூலம் கண மருத்துவத்தினை கற்றுக்கொண்ட அவர்- பல ஆய்வுகள் மூலம் புதிய பல மருத்துவ அணுகுமுறைகளையும் புகுத்திக் கொண்டார்.

இதற்காகத் அவர் சித்தர்களின் ஏட்டுச்சுவடிகளையும், மூலிகைக் குறிப்புக்களையும், கால் நடையாகச் சென்று பல்வேறு இடங்கள் தேடி ஒன்று திரட்டிக்கொண்டதோடு, அதன் மூலம் தான் கற்றதைப் பரீட்சித்துப் பார்த்து வெற்றியும் கண்டார். இதன் மூலம் அவரது புகழ் நாடெங்கும் பரவவே பல தொகையான நோயாளிகள் அவரது சிகிச்சை முறையை நாடிவரலாயினர்.

**உங்களது தாயாரின் மருத்துவப் பங்களிப்புப் பற்றிக் கூறமுடியுமா?**

எனது தாயார் 1945 ஆம் ஆண்டிலிருந்து 1956 ஆம் ஆண்டு வரை சுமார் 11 ஆண்டுகள் மருத்துவ சேவையாற்றி, அந்தப் பொறுப்பினை என்னிடம் ஒப்படைத்ததோடு, எனது குருவும் ஆவார்.

இங்கு வரும் நோயாளருக்கு தங்குமிட வசதி, உணவு என்பன இலவசமாகவே வழங்கப்பட்டதோடு, நோயாளிகள் மருத்துவமனையில் தங்கியிருப்பதைப் போன்றல்லாது ஒரு இயல்பான சூழ்நிலையில் தங்க வைக்கப்பட்டு மருத்துவம் பார்க்கப் பட்டது.

மேலும் மதகுருமார், ஏழைகள், சுற்றயல் மக்கள் என்போரிடம் கட்டணம் பெறப்படாது மருத்துவம் பார்க்கப்பட்டதோடு, இன்றும்கூட மருத்துவத்திற்கான செலவு கேட்டுப்பெறுகின்ற நடைமுறை இல்லாது, கொடுப்பதைப்பெறும் சிறப்பியல்பே காணப் படுகின்றது.

**உங்களுடைய மருத்துவமுறை பற்றி விளக்குவீர்களா?**

எங்களுடைய மருத்துவமுறையானது மேலைத்தேய மருத்துவ முறை போன்று குளிகைகளை உள்ளெடுப்பதோ அல்லது ஊசிமூலம் மருந்தினை உட்செலுத்துவதோ அல்ல. எங்களுடைய முறைகள் அனைத்தும் வெளிவாரியாகச் செய்யப்படும் சிகிச்சைகளே. அதாவது கண்ணுக்கு குழம்பு பூசுதல், தலைக்கு எண்ணெய் தேய்த்தல், மூக்கிற்கு நையம் இடுதல் என்பன ஆகும்.

1965 ஆம் ஆண்டில் Dr.சு.வீரகத்தியாரின் மறைவைத் தொடர்ந்து அவரது பாரியார் Dr.வீ.அபிராமி கண் மருத்துவத்துறையினை முன்னெடுத்துச் சென்றார்.

சுமார் ஒரு தசாப்தகாலமாக கண் மருத்துவத்துறையில் ஈடுபட்ட திருமதி Dr.அபிராமி வீரகத்தியார் தனது மகனான Dr.வீ.சேனாதிராசாவிடம் மருத்துவப் பொறுப்பையும், வழக்காறுகளையும் ஒப்படைத்தார். இதனைத் தொடர்ந்து 1956 ஆம் ஆண்டு இலங்கை சுதேச மருத்துவ சபையால் அங்கீகரிக்கப்பட்ட 'MR CPIM' எனும் மருத்துவச் சான்றிதளைப் பெற்றுக்கொண்ட Dr.வீ. சேனாதிராசா - தனது பரம்பரைக் கண் மருத்துவப் பணியினைத் தொடர்ந்தார்.

**உங்களுடைய 'MRCPIM' என்ற மருத்துவச் சான்றிதழைப் பெற விசேட கடப்பாடுகள் எதுவும் தேவைப பட்டனவா?**

ஆம். கொழும்பு சென்று மருத்துவச் சபையின் பரீட்சை ஒன்றுக்குத் தோற்றவேண்டியிருந்தது. அதில் முதற் தடவையே நான் சித்தியெய்தியதால், சிரமங்கள் எதுவும் ஏற்படவில்லை. அத்தோடு நான் ஒருவர் தான் கண் மருத்துவத்துறையில் தோற்றியவர் என்பது சிறப்பாகும்.

1956 ஆம் ஆண்டில் தொடங்கி இன்றுவரை (2004) சுமார் 48 ஆண்டுகள் கண் மருத்துவத்துறையில் சாதனை பல படைத்துள்ளார். (இவரது தந்தை 47 ஆண்டுகளும், தாய் 11 ஆண்டுகளும் மருத்துவத்துறையில் ஈடுபட்டவர்கள்) இதனால், இவரைப் பலரும் 'கண் வைத்திய நிபுணர்' என அழைப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது.

**கண் நோயியல் பற்றி யாது கூறுவீர்கள்?**

நேத்திர நயன விதிப்படி 96 வகையான நோய்கள் கண்களில் வரும் இவற்றில் சில மாற்றக்கூடியது, சில மாற்றமுடியாதது, சில அதன் உக்கிரத்தைத் தணிக்கக்கூடியது என உள்ளது. இதைப் பழங்காலத்து ஞானிகளாலும், ரிசிகளாலும் கூறப்பட்டவை.

எனவே, நாங்கள் ஒரு நோயைப் பார்த்தவுடன் மாற்றமுடியுமா இல்லையா என்பதை நோயாளியிடம் கூறிவிடுவோம். இது ஆங்கில மருத்துவத்தால் முடியாததாகும். கடந்த காலங்களில் ஏற்பட்ட வன்செயல்களைத் தொடர்ந்து வெளியூர் நோயாளிகளின் வருகை வீழ்ச்சி கண்டது. இதற்கு ஏ-9 பாதையூடான போக்குவரத்து கிடப்பில் போடப்பட்டதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

ஆனால், இன்று அந்தப் பாதை திறக்கப்பட்டபோதும், நோயாளிகளின் வருகை குறைவாகவே காணப்படுகின்றது. இதற்கு வைத்தியர் இன்றும் இருக்கிறாரா? இப்பொழுதும் வைத்தியம் செய்கிறாரா? என்ற ஒரு நிலையினைத் தெளிவுபடுத்த முடியாதநிலை ஒன்றும் இருப்பதோடு, நவீன வைத்திய வசதிகள் (மேலைத்தேய மருத்துவம்) கிடைத்தமையால் மக்கள் அதனை நாடிச் செல்லுகின்ற நிலைமையும் காணப் படுகின்றது.

**ஆங்கில மருத்துவமுறை பற்றித் தங்களது கருத்து என்ன?**

ஆங்கில மருத்துவமுறை இன்று 'கண்ணாடிக் கலாசாரத்தை' உருவாக்கியுள்ளது. சிறுவர் முதல் முதியோர் வரை கண்ணாடிகளுடனேயே செல்வதைக் காணலாம்.

இவர்கள் கண்ணில் காணப்படும் எந்த நோயையும் பூ விழுதல் அல்லது கற்றாக் எனவே குறிப்பிடுகின்றனர். இதற்காக அறுவைச் சிகிச்சையை மேற்கொண்டு, 'லென்ஸ்' பதிக்கும் முறையை கையாழுகின்றனர். இது பார்வை தெரியலாம் அல்லது தெரியாமல் போகலாம். ஆனால் தமிழ் வைத்தியமுறை அப்படியல்ல.

இன்றைய மேலத்தேய மருத்துவத்தின் முன்னேற்றமும் மக்களின் நாகரீக வளர்ச்சியும் பயன்பாடு மிகக பக்கவிளைவுகள் மிகக்குறைந்த சுதேச மருத்துவத்துறையை பின்தள்ளச் செய்தது எனலாம்.

**வைத்தியத்துறையில் தங்களுடைய சாதனை என்ன?**

இன்றைவரை 48 ஆண்டுகள் எந்த நிறுவனங்களோ, அமைப்புக்களாகவோ உதவியும் இன்றி தனித்து நின்று பல்லாயிரக்கணக்கான நோயாளருக்கு சிகிச்சையளித்து சுகப்படுத்தியுள்ளேன்.

இத்தகைய அரிய தகவல்களை கொண்ட சிரேஷ்ட மருத்துவத்துறையானது- செவிவழியாகவும், கையெழுத்துப்பிரதியாகவும், செய்யுள்வடிவமாகவும், ஏட்டுச்சுவடிகளிலும் பேணபட்டு பின் அவை சந்ததி பிறல்வாழ் சிதைந்துபோகின்றன.

எனவே இத்தகைய மருத்துவத்துறை தொடர்பான உயர் கல்வி நிறுவனங்கள் 'ஆவணக் காப்பகம்' செய்வதோடு இவர்களின் துறை சார்ந்த பட்டறிவினையும் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

**மருத்துவ உலகிற்கு நீங்கள் கூறும் செய்தி என்ன?**

கீழைத்தேய, மேலத்தேய மருத்துவமுறைகள் எல்லாம் தமக்குள் ஒன்று சேர்ந்து ஒரு உடன்பாடான நிலைகது வருதல் வேண்டும். இதன் மூலம் ஒவ்வொரு மருத்துவத்துறையும் தமக்கென கொண்டுள்ள சிறப்பியல்புகளை மற்றையத்துறைகளில் பிரயோகித்து பயன்படவழியேற்படுத்தல் வேண்டும். இதைவிடுத்து தமக்குள் முரண்படுதல் ஒருபோதும் பிரச்சினைக்கு தீர்வாகாது என்பதுடன். சுதேச மருத்துவத்தை ஊக்குவிக்க அரசு முன்வரவேண்டும் என்பதாகும்.

ஆனால், தமிழ் வைத்திய முறை அப்படியல்ல மூன்று நூற்றாண்டுகளைக கண்ட இந்த வைத்தியத்துறை- படரும் கொடிகள் இன்றித் தவிக்கின்றது. இந்த வைத்தியத் தலைமுறையின் முதிர்ச்சியுடன் சிறப்பான இந்தத் துறையும் முடிவுகண்டு விடுமோ என எண்ணும்போது நெஞ்சை நெருடுகின்றது.

**இன்றைய சமுதாயம் பற்றி உங்கள் மருத்துவத்துறை சார்பாக என்ன கூற விரும்புகிறீர்கள்?**

இன்றைய சமுதாயம் மிகவும் வேகமானதாகும். இதனாலே அவர்கள் ஆங்கில மருத்துவத்துறையை அதிகம் நாடுகின்றனர். இங்கு ஒன்றில் உண்டு அல்லது இல்லை எனற முடிவினை மிக வேகமாக பெற முடியும். பக்கவிளைவுகள் அதிகமாகும்.

ஆனால், எமது மருத்துவம் அப்படியல்ல. மிக ஆறுதலாகவே நோயைக் குணப்படுத்த முடியும். அவ்வாறு ஒரு தடவை குணப்படுத்தப்பட்டால் மீண்டும் அந்தப் பிரச்சினை தோன்றாது.

இந்த மருத்துவமானது பக்க விளைவுகள் இல்லை எனறே கூறக் கூடியளவுக்கு மிக குறைவானதாகும். எனவே இன்றைய சமூகம் இதனைப்புரிந்து கொண்டு பொருத்தமான தெரிவினை மேற்கொள்ளுதல் வேண்டும்.

விருந்தோம்பல் பண்பாடு நிறைந்த எளிமையான வரணியில்தான் இவர் வசிக்கிறார். இவருடைய பிறப்பும் பூர்வீகமும் வரணி என்பதோடு, எதுவித ஆடம்பரமும் அற்ற 19 ஆம் நூற்றாண்டுக் கட்டடக் கலையைப் பின்பற்றி அமைக்கப்பட்ட பழைய காலத்து வீட்டிலேயே தனது வைத்தியத் தொழிலை நடத்திவருகிறார்.

அவரது வீட்டு முகப்பில் எதுவித அறிவித்தல் பலகையோ, விளம்பரப்பலகையோ காணப்படாது. அந்தக் குடியிருப்பின் சாதாரண வீடுகளில் ஒன்றாகவே இதுவும் காணப் படுகின்றது.

இது பற்றிப் பல நோயாளர்கள் கேட்டபோதும் எல்லோருக்கும் அவர் வாயிலிருந்து வரும் பதில் ஊர் அறிஞ்ச பரியாரிக்கு விளம்பரம் எதற்கு என்பதாகும். ◆

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*இனம்போன்று இனம் அல்லார் கேண்மை மகளிர்*
*மனம்போல வேறு படும்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## ஒருபுறம் ஜே.வி.பி மறுபுறம் ஹெல உறுமய இரண்டுக்கும் நடுவே சிக்கியுள்ள அரசு

அறுதிப் பெரும்பான்மை பலம் கிடைக்காவிட்டாலும் கூட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் அரசொன்றை அமைப்பதற்கான சகல உரிமைகளையும் உடையவர்களாகி புதிய ஆட்சிக்கான பிரதமரையும், தேர்வு செய்து அவருக்குப் பதவிப்பிரமாணமும் செய்து வைத்துவிட்டார்கள்.

சிங்கள மக்கள் தங்களுக்கான அரசியல் தலைமையை முழுமையாகத் தெரிவு செய்வதில் - அதாவது ஸ்திரமான வலுக்கொண்ட தலைமை ஒன்றை தேர்ந்தெடுப்பதில் - தீர்க்கமான நம்பிக்கையை எந்தவொரு தனியான கூட்டணியிலும், கொண்டிருக்கவில்லை என்பதே இந்தத் தேர்தல் முடிவுகளும் உணர்த்தியுள்ளன.

தென்பகுதி மக்களின் இந்த முடிவானது மீண்டும் ஒரு தொங்கு நாடாளுமன்றம் உருவாக வழிவகுத்துள்ளதுடன், புதிய அரசானது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளில் தீர்க்கமாகவும் துணிச்சலாகவும் முடிவெதனையும் மேற்கொள்ளமுடியாத இக்கட்டான நிலை உருவாகவும் காரணமாகிவிட்டது.

குறைந்தபட்சம் தனியாக 113 உறுப்பினர்களையாவது கொண்டிருக்கவேண்டிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்கு 105 இடங்கள் மட்டுமே கிடைத்துள்ள நிலையில் எதிர்க்கட்சியில் உள்ள சில கட்சிகளின் உறுப்பினர்களை எப்படியாவது பேரம்பேசி தம்வசம் இழுக்கமுடியும் என்ற நம்பிக்கையுடனும், ஜாதிகஹெல உறுமயவினரின் ஆதரவையும் பெறமுடியும் என்ற எதிர்பார்ப்புடனும், ஐ.ம.சு. முன்னணி ஆட்சியை அமைத்துள்ளது என்பதில் சந்தேகம் இல்லை.

எதிர்க்கட்சியில் உள்ள கொள்கை உறுதியற்றோரை பதவிகளை முன்வைத்து, பேரம்பேசுதல் சாத்தியமே இது கடந்தகாலங்களில் கைக்கொள்ளப்பட்டு வந்த ஒரு மரபேயாகும்.

ஆனால், ஹெல உறுமயகாரர்களை பொறுத்தவரையில், பிரச்சினை முற்றிலும் மாறுபட்ட ஒன்றேயாகும். பொதுத்தேர்தல் ஒன்றில் முதல்முறையாக எந்தவிதமான கூட்டும் வைத்துக்கொள்ளாது, தனியாகப் போட்டியிட்ட பௌத்தபிக்குகளின் இந்தக் கட்சிக்கு கிடைத்துள்ள 9 ஆசனங்களும் தற்போது இலங்கை அரசியலில் ஆட்சி புரிவோரின் தலைவிதியை தீர்மானிக்கும் சக்தியாக உருவாகியுள்ளதும் நிஜமேயாகும்.

இந்த பௌத்த மத அடிப்படைவாதக் கட்சியின் முக்கிய கொள்கையின் அடிப்படையிலான அரசியல் இலக்கு பௌத்த தர்ம அரசை அமைப்பதேயாகும்.

இது இதுவரை இலங்கையில் நடைமுறையில் இருந்து வந்த பேரினவாத அரசியல் அனுகுமுறையிலும் பார்க்க, ஆபத்தானதும் மத உணர்வை வெறியாக்கி அதன் மூலம் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளத்தூண்டும் உள்நோக்கத்தைக் கொண்டதுமாகும். தற்போது ஆட்சியை அமைக்கும் அரசிற்கு, ஹெல உறுமயக்காரரின் ஆதரவு அவசியமாகும். அவர்களை நிராகரித்துவிட்டோர் அவர்களின் கோரிக்கைகளை புறக்கணித்து ஒதுக்கிவிட்டோர், அரசாங்கத்தை நடத்துவதென்பது சாத்தியமே இல்லை.

ஐ.ம.சுதந்திர முன்னணியினரின் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு நிலைக்கவேண்டுமானால் அது தன்னை ஒரு பௌத்த தர்ம அரசாக மாற்றிக்கொள்ளச் சம்மதிக்கவேண்டும். உடனடியாக இல்லாவிட்டாலும் மெல்ல மெல்ல அந்தக்கொள்கைக்கு அனுசரணையாக தங்களால் இயங்க முடியும் என்பதை உறுதிப்படுத்தவே, மஹிந்த ராஜபக்ஷவுக்கு, பிரதமர் பதவியை வழங்கி கதிர்காமரைத் தூக்கி வீசவேண்டிய நிலை சந்திரிக்காவுக்கு அதாவது ஜனாதிபதிக்கு ஏற்பட்டது, என்பதும் மறைக்கமுடியாத உண்மையேயாகும்.

இலங்கையின் ஆட்சிப்பீடத்தில் ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர் என்ற முக்கிய பதவிகளில் பௌத்த சிங்களவர்களே இருக்கவேண்டும் என்பது ஹெலஉறுமயவின் விருப்பம் ஆகும். அதன்னை நிராகரித்துவிட அரசால் முடியாது.


மகிந்த ராஜபக்ஷவின் தேர்வு ஹெலஉறுமயவினரை திருப்திப்படுத்தியிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. இதன் மூலம் அரசு அவர்களின் ஆதரவை தம்பக்கம் இழுத்துள்ளது என்றே கூறவேண்டும். என்றாலும், இத்துடன் அரசு தப்பிப்பிழைத்துக்கொண்டது என்று கூறிவிட முடியாது.

இனிவரும் கட்டங்கள்தான் முக்கியமானவை.

ஒரு புறம் உள்ளே இருந்து அழுத்தம் கொடுக்கும் ஜே.வி.பியினர். மறுபுறம் வெளியே இருந்து அழுத்தம் கொடுக்கும் ஹெலஉறுமயவினர் என, புதிய அரசுக்கான நெருக்கடிகள் ஆரம்பமாகிவிட்டன.

இந்த நிலையில் இனப்பிரச்சனைக்கான சமாதான முயற்சிகளை இந்த அரசு எவ்வாறு முன்னகர்த்தப் போகின்றது என்பதுதான் இப்போதுள்ள மில்லியன் டொலர் பெறுமதியான கேள்வியாகும்.

# நாடும் நடப்பும்




# பண்டா பாரம்பரிய அரசியல் மரபு ஜே.வி.பியினால் விரைவில் அழியும்

## சிறிலங்கா சுந்திரக்கட்சி சிரேஷ்ட உறுப்பினர் தெரிவிப்பு

பொதுத்தேர்தல் முடிவுகள் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு மகிழ்ச்சியாகும் ஒன்றல்ல என - அந்தக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் கவலை தெரிவித்துள்ளார்.

இந்தத் தேர்தல்மூலம் சுதந்திரக்கட்சியின் வாக்கு வங்கியை ஜே.வி.பியே பயன்படுத்திக்கொண்டுள்ளது எனத் தெரிவித்த அவர், ஆட்சியைக் கைப்பற்றும் அவசரத்தில் கட்சியின் எதிர்கால வலுவைப் பாதுகாக்க ஜனாதிபதி தவறிவிட்டார் என்றும், இனிவரக்கூடியதான தேர்தல்களில் இதன் தாக்கத்தை அவர் உணர்ந்து கொள்வார் என்றும் கூறிய அந்த உறுப்பினர் பண்டாரநாயக்க - பாரம்பரியம் என்ற அரசியல் மரபு ஜே.வி.பியின் உள்வரவால் விரைவில் அழிந்துவிடும் அபாயம் இருப்பதாகவும் தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் இந்த அவலத்திற்கு ஜனாதிபதியும், அவரது சகோதர் அநுரா பண்டாரநாயக்காவும் பொறுப்பேற்க வேண்டிவரும் என எச்சரித்த முன்னாள் அமைச்சரான அந்த சிரேஷ்ட உறுப்பினர், இந்த அரசு வெகுகாலம் நிலைத்து நிற்பதற்கான சாத்தியம் மிகக்குறைவாகவே உள்ளது என்றும் கூறினார்.

# பௌத்த அரசின்மூலம் சமாதானம் ஹெலஉறுமயவின் இலட்சியம் அதுவே!

## அக்கட்சியின் பேச்சாளர் கூறுகிறார்

ஜாதிக ஹெல உறுமயவினர் - எந்தக் கட்சியுடனும் அரசு அமைக்க இணையப்போவதில்லை - என்றாலும் எமது பிரதான இலக்கான பௌத்த சாம்ராஜ்யம், தர்ம ஆட்சி என்ற இலட்சியங்களை ஏற்றுக்கொள்ளும் எந்தக் கட்சிக்கும் தாம் ஆதரவளிக்கத் தயார் என்று இந்தக் கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் ஒன்று திரண்டு தமிழரசுக் கட்சிக்கு வாக்களித்ததைப்போன்று, பௌத்த சிங்களவர்கள் ஒன்றாக ஜாதிக ஹெல உறுமயவுக்கு வாக்களித்திருந்தால், இன்று நாங்கள் இந்த நாட்டில் பௌத்த தர்ம ஆட்சியொன்றை நிறுவியிருப்போம் என்றும் கூறிய அவர், நாம் யாருடனும் கூட்டுச் சேர்ந்து வெற்றி பெறவில்லை. தனித்து நின்று கொள்கை அடிப்படையிலே இந்த முதல் வெற்றியை பெற்றுள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார்.

நாம் வெறும் அரசியல் வாதிகளல்ல, பதவிகள் எமக்கு முக்கியமல்ல. பௌத்த அரசை அமைத்தலே எமக்கு முக்கியம். அத்தகைய அரசு மட்டுமே தர்மத்தைப் பாதுகாக்கும், சமாதானத்தை நிலைநிறுத்தும், பேச்சுவார்த்தைகள் சமாதானத்தை ஏற்படுத்தாது என்றும் அவர் நன்றி தெரிவிக்கும் கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் கூறினார்.

# புதிய அரசுக்கு சர்வதேச ஆதரவு பெருமளவில் கிடைப்பது சந்தேகம்

## அரசியல் நோக்கர்கள் கருத்து

ஐக்கிய மக்கள் சுந்திர முன்னணி அரசு மிகப்பலவீனமான ஒன்றெனவும், அது அமைக்கவுள்ள நாடாளுமன்றம் ஒரு தொங்கு நாடாளுமன்றமாகவே இருக்கும் என்பதால், சர்வதேச சமூகத்தின் ஆதரவு பெருமளவில் இருக்கப்போவதில்லை என்றும் அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

சமாதானத்தை வலியுறுத்திவரும் சர்வதேச சமூகமே இலங்கையில் அபிவிருத்திக்கான பெருமளவு நிதியை வழங்க உறுதியளித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில், புதிய அரசு சமாதான முன்னெடுப்புக்களில் தமக்கு ஆர்வம் அதிகம் எனத் தேர்தல் காலத்தில் பிரசாரம் செய்தாலும், நடைமுறையில் எந்தளவுக்கு அதனை செயற்படுத்துவார்கள் என்பது இப்போதைக்குத் தெரியாது.

இதேவேளை, விடுதலைப் புலிகள் தமக்கான மக்களாதரவை இந்தத் தேர்தலில் முழுமையாக நிரூபித்துள்ள நிலையில் அவர்கள் தமது பேரம் பேசும் வலுவை அதிகரித்துள்ளமையால், புதிய அரசுடன் அவர்கள் எந்தமாதிரியான அணுகுமுறையைக் கடைப்பிடிப்பார்கள் என்பது தெரியவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சமாதானத்தின் பேரிலேயே வெளிநாட்டு நிதியுதவிகள் கிடைக்கும் சாத்தியக்கூறே இருப்பதால், அரசு - புலிகளுடன் எவ்வகையிலாவது பேசவேண்டிய அவசியம் - ஒரு நிர்ப்பந்தமாக உள்ளது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# புதிய அமைச்சரவை அமைப்பதில் அரசுக்கு பெரும் நெருக்கடி

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் புதிதாகப் பதவியேற்கவுள்ள அமைசசரவையை உருவாக்குவது தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் கடும் வாதப் பிரதிவாதங்கள் நிகழ்ந்து வருவதாகக் கூறப்படுகிறது.

ஏற்கனவே, பிரதமர் தெரிவில் முரணான கருத்துக்களைக் கொண்டுள்ள ஜே.வி.பியினர் - அமைச்சர்கள் தெரிவில் தமது செலவாக்கை அதிகளவில் பிரயோகிக்க முயல்வதாக தெரிய வருகிறது. பொதுத்தேர்தலில் 39 இடங்களில் போட்டியிட்டு, 36 இடங்களைப் பெற்றுள்ள ஜே.வி.பி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குக் கிடைத்த மொத்த இடங்களில், மூன்றில் ஒரு பங்கு கிடைத்துள்ளதால், அமைச்சரவையிலும் அதிக இடங்களைக் கோருகின்றது என்று பெயர் குறிப்பிட விரும்பாத ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஜே.வி.பியினரின் அழுத்தத்திற்குப் பணிந்து போகும்நிலை ஏற்பட்டால், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்குள் கருத்துமுரண்பாடுகள் அதிகரிக்கும் எனவும், அது புதிய அரசை மேலும் பலவீனமாக்கி, மற்றொரு தேர்தலுக்கோ, மாற்று அரசிற்கோ வழிவகுத்துவிடும் என்றும் அவர் கூறினார்.

கல்வி உளவியல்

ஆர்.கே.மேனன்

# ஆசிரியத் தொழிலும் மாணவ மனங்களும்

இது ஒரு ஆழமான, அவதானமான, ஆரோக்கியமான கட்டமைப்பிற்குள் நகரவேண்டிய பலவகையான இடைதொடர்புகள் கொண்ட இரு வேறு துருவங்களாகும். இதற்குரிய மகத்துவத்தையும், இதற்குரிய எதிர்கால முக்கியத்துவத்தையும் உணரவேண்டியது கல்வி சார் ஆளணியினர்க்கு இன்றியமையாததொன்றாகும்.

ஆகவே, ஒரு மாணவனின் அத்திவார மன நிலைகளே அவனது எதிர்கால நடத்தைக் கோலங்களுக்கு வித்திடுகின்றது. இந்த அதிர்வார மனநிலைகளின் ஒரு பகுதி ஆசிரியர்களின் தொழில் வினைத்திறனில் தங்கியுள்ளது. நிறைவு செய்யப்படாத தேவைகொண்ட மனநிலைகள் - பாரிய விபரீதமான விளைவிற்கு வித்திடும் என்பதை இந்த ஆசிரியர்களது கல்வி உளவியலில் கண்டிருப்பார்கள். இந்த மனநிலைகளை முறையான ஆசிரியத் தொழிலுக்காக ஒதுக்கப்பட்ட கடமைகள் ஆகின்றது. அந்தவகையில், இந்தத் தொழிலுக்கு ஊடாக மாணவ மனநிலைகள் பற்றிச் சற்று ஆராய்வோம்.

ஒரு வேலைத்திட்டத்தின் இரண்டு வகையான வெளியீடுகள் உண்டு.

1. நேரடியான உற்பத்தி வெளியீடு
2. மறைமுகமான உற்பத்தி வெளியீடு

இதில் மறைமுகமான நீண்டகாலப் போக்கிற்கு ஊடான வெளியீடு ஆசிரியத் தொழிலாகும். இதில் பலவகையான ஆளணி வளங்கள், தனிமனித வளர்ச்சியில் பங்கெடுக்கின்றது. இதனால் வெளியீட்டிற்கான வகைகூறல் தன்மை என்பது ஆசிரியர்களது மனசாட்சியிலே தங்கியுள்ளது.

மேற்கூறப்பட்ட காரணத்தினாலும், மனங்களோடு போராடுகின்ற ஓர் ஆரோக்கியமான, அவதானமான தொழில் என்பதனாலும் தான் இந்த ஆசிரியத் தொழில் இன்றுவரையும் ஏனைய தொழில்களைவிட மகத்தான தொழிலாகப் போற்றப்படுகின்றது.

அந்தவகையில், ஒரு மாணவன் வகுப்பறைக்குள் பிரவேசிக்கின்றபொழுது பல்வேறு மனநிலைகளோடு பரிணமிக்கின்றான். எத்தனையோ நிறைவு செய்யப்படாத தேவைகளோடு பிரவேசிக்கின்றான். இவற்றையெல்லாம் கணக்கிலெடுக்காது, கல்வியைப் போதிப்பதால் எந்தவித பயனுமில்லை என்பது ஒவ்வொரு ஆசிரியர்களும் தமது அனுபவ கண்ணோட்டத்தில் கண்டிருப்பார்கள்.

இவற்றையே ஓரளவு மேலோட்டமாக ஆராய்கின்றேன். ஆனால், இது ஒவ்வொருவரது கண்ணோட்டத்திலும் வேறுபடலாம். இந்தக் கட்டுரையில் நாம் மாணவர்கள் என்றால் யார் என்பது பற்றியும், அவர்கள் எப்படிப்பட்ட சொத்துக்கள் என்பது பற்றியும் நோக்கவேண்டும். பின்பு மன நிலைகளின் மகத்துவம் என்ன? அதன் மாறுபாட்டால் ஏற்படும் விளைவுகள் என்ன என்றெல்லாம் நோக்குவோம்.

**ஒரு மாணவன் வகுப்பறைக்குள் பிரவேசிக்கின்றபொழுது பல்வேறு மனநிலைகளோடு பரிணமிக்கின்றான். எத்தனையோ நிறைவு செய்யப்படடாத தேவைகளோடு பிரவேசிக்கின்றான். இவற்றையெல்லாம் கணக்கிலெடுக்காது, கல்வியைப் போதிப்பதால் எந்தவித பயனுமில்லை என்பது ஒவ்வொரு ஆசிரியர்களும் தமது அனுபவ கண் ணோட்டத்தில் கண்டிருப்பார்கள்.**

மாணவர்கள் என்பது - உலகியல் வாழ்க்கையில் ஒரு மகத்தான சொத்துக்கள், மானிட வாழ்க்கையின் மணிமுத்துக்கள், எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும் இளம் ஆற்றல்கள், சுகமான எண்ணங்களைச் சுவாசிக்கும் சுதந்திரப் பறவைகள், தட்டி விட்டால் தளாந்து விடும் முட்டைக் கருக்கள், உடைக்கவும் முடியாமல், விழுத்தவும் முடியாமல் விழிம்பில் இருக்கும் தனிச் சொத்துக்கள். இப்படிப்பட்டதுதான் மாணவத்துவம். இப்படிப்பட்ட மாணவத்துவத்தின் உயர்ச்சிக்கும், தாழ்ச்சிக்கும் அவர்களின் மனநிலைகளே காரணம்.

ஒவ்வொரு மாணவர்களும் பல்வேறு மன நிலைகளோடு பரிணமிக்கின்றனர். ஒவ்வொரு மாணவரிடத்திலும் பல்வேறு உளவியல் தேவைகள் உருப்பெறுகின்றது. இவற்றையெல்லாம் தீயதென்று தட்டி ஒதுக்காது, தீயதாய் இருப்பினும் நல்லதாய் இருப்பினும் அவனது அந்தந்த வயதுக்கேற்ப உருவாக்கப்படுகின்ற ஓர் விடயமாகக் கருதவேண்டும்.

முதலில் அந்த மனநிலைகளை ஆழமாக உற்றுநோக்கவேண்டும். சில மாணவர்கள் தம்மை ஆசிரியர்கள் உயர்வாகக் கருதவேண்டும், ஆசிரியர்கள் மத்தியில் தான் உயர்வான நிலையில் இருக்க வேண்டும், எதிர்பாலாரைத் தான் கவரவேண்டும், மற்றவர்களைவிட தமது வெளிக்கொணர்வுகளை வித்தியாசமான தரத்தில் அமைக்க வேண்டும், நண்பர்கள் மத்தியில் தான் முன்னிலையில் இருக்க வேண்டும், தனது திறமைகள் அடுத்தவருக்குத் தெரிய வேண்டும், தனக்குத் தெரியாதவற்றையும் தெரிந்தது போல் காட்டவேண்டும், மற்றவர்கள் என்னை எப்படி நோக்குவார்களோ என்ற அச்ச சுபாவம், தான் செய்வது சரியா? என்ற ஏக்க உணர்வு - பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கமுடியாத சுபாவம், தத்தமக்குப் பிடிக்காதவற்றை நிறைவேற்ற முடியாத ஓர் முரண்பாட்டுப் பிரச்சினை, இவர்களோடு நான் எப்படி போட்டியிடுவது என்கின்ற தன்னம்பிக்கை அற்ற தாழ்வுச் சிக்கல், மற்றவர்கள் அல்லது ஆசிரியர்கள் என்னை முதன்மைப் படுத்தவில்லை என்று ஆதங்கப்படும் தன்மை, எல்லோரும் என்னைப் பற்றியே விமர்சிக்க வேண்டும் என்ற உணர்வு, வயதுக்குட்பட்ட காதல் உணர்வு, எதையும் வெறுக்கின்ற ஒரு விரக்திப்போக்கு, இவற்றை விடப் பருவ வகுப்பைச் சேர்ந்த மாணவர்களிடத்தில் பெரும்பான்மையாகக் காணப்படுகின்ற பிரச்சினை என்னவெனில் - மற்றவர்கள் தமது பிழைகளைச் சுட்டிக்காட்டும்போது ஏற்றுக்கொள்ள முடியாது உட்தெறிப்பின் ஊடாக பிழை கூறியவர்களிடத்து பிழைகளை தேடிக்கண்டறிகின்ற ஒரு மனநிலை. இப்படிப் பல்வேறு மனநிலைகளோடு பாடசாலையில் தமது பாதங்களை எடுத்து வைக்கின்றார்கள்.

உண்மையில் இதில் எதுவும் தவறான மனநிலைகள் அல்ல. அவனது சூழல், அவனது தனிமனித சிந்தனைகள், அவனது அறிவு மேம்பாட்டு வீதம், அவனது பருவ உணர்ச்சி போன்றவற்றின் மூலம் உருப்பெற்ற மனநிலைகளே. இதைச் சீர்செய்யவேண்டுமே தவிர, பிழை எனத் தட்டி ஒதுக்கக்கூடாது. ஏனெனில், தேடலுக்கூடான வயது. அதைத் தட்டி ஒதுக்கும்போது அவனது உளவியலில் பாரிய பின் விளைவை ஏற்படுத்திவிடும். இப்படிப்பட்ட மனநிலைகளைப் புரியாது பாடசாலையில் பாடம் கற்பிப்பதில் பயன் ஏதுமில்லை.

முதலில் அவனது மனநிலையைச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். எண்ணங்கள் தான் ஒரு மனிதனின் மகத்துவமான வாழ்க்கையைத் தீர்மானிக்கின்றது. இந்த எண்ணங்களாலான மனநிலைகளை எதிர்த்திசையில் நகரவிடுவதால் தான் மானிட வாழ்க்கையில் சில விபரீதங்கள் முளைப்பதே தெரியாமல் சிலரை முட்டுக்கட்டை ஆக்குகின்றது.

இந்த எண்ணங்கள் வளர்வதும், சீர் செய்வதும் இந்த மாணவ பருவத்தில் தான் இடம் பெறவேண்டும். இந்த மனநிலைகள் என்ற எண்ணங்கள் ஆளுக்காள் வேறுபடுகின்றது. இதைத்தான் ஒருவகையில் தனியாள் வேறுபாடு என்றெல்லாம் கூறுகின்றார்கள்.

மாணவர்களிடத்தில் இந்த மனநிலைகளைச் சரியாகப் புரிய முடியாதவிடத்து, அதைச் சீர்செய்யவோ மாற்றவோ முற்படக்கூடாது. இதில் தான் தனித்தவம் எனும் விடயம் தலையெடுக்கின்றது. ஒவ்வொரு மாணவனுக்கும் ஒவ்வொரு தனிததுவம் இருக்கும். இந்தத் தனித்துவங்கள் பல்வேறு வகைகளால் தீர்மானிக்கப்படுகின்றது. அவன் வாழும் குடும்பம், சூழல், சகபாடிகள் இவற்றையெல்லாம் விட, தனித்தனி சிந்தனைகளால்தான் பெரும்பான்மையான தனித்துவங்கள் உருவாக்கப்படுகின்றன.

சமூகத்தோடு ஒன்றித்து வாழமுடியாத தனித்துவங்களை ஒரு மாணவன் கொண்டிருக்கும்போதுதான் அவனுக்கும், சமூகத்துக்கும் இடையில் முரண்பாடுகள் வருகின்றன. அத்தோடு சமூகம் அவனது தனித்துவங்களை விளங்கிக்கொள்ள முடியாதபோதும், அவனுக்கும், சமூகத்துக்குமிடையே முரண்பாடு வரலாம். இங்கு மீண்டும் வகுப்பிற்குள் வாருங்கள். ஒரு ஆசிரியர் -மாணவனது மனநிலைகளைச் சீர்செய்யும்போது, அவனது தனித்துவத்தை ஆழமாக விளங்கிக்கொள்ளவேண்டும். ஆசிரியர் அவனது தனித்துவத்தில் பெருமளவு கைபோடக்கூடாது. அது அவனுக்கும், ஆசிரியருக்குமிடையே முரண்பாட்டை ஏற்படுத்திவிடும். தனித்துவத்தை அடுத்தவர்கள் பாதிப்பதால்தான் பல்வேறு இடங்களில் முரண்பாடுகள் ஏற்படுகின்றது. தனித்துவத்தைத் தாமாகவே சீர்செய்யலாமே தவிர, அடுத்தவர் சீர்செய்ய முற்படக்கூடாது.

எமக்கு உளவியல் பற்றிய சரியான அறிவு இல்லாதபோது (ஆசிரியர்) மாணவரது மன நிலைகளோடு ஆழமாக ஊடுருவக்கூடாது. அது விபரீதமான விளைவுகளுக்கு வித்திடும். இந்த வகையில், ஆசிரியத்தொழில் என்பது மாணவர் மனநிலைகளோடு ஊசலாடி, உலகத்தின் எதிர்காலத் தூண்களை வாழ வைப்பதா? அழியவைப்பதா? என்று அவதானக்கண்ணோடு தொழிற்படும் ஒரு அற்புதத் தொழில்.

---

அகதி வாழ்வின் அவலங்கள் XL

சிவா சின்னப்பொடி

**பு**லம் பெயர்ந்த சூழலில் நமது பிள்ளைகள் அடையாளம் இழந்து போகாமல் தடுப்பதற்கு அந்த நாடுகளின் புறச்சூழலை நாம் மாற்றமுடியாது. அது நமது சக்திக்கு அப்பாற்பட்டது. நாம் விரும்பினாலோ விரும்பாவிட்டாலோ அந்தச் சுழலில் எம் மீது ஏற்படுத்தும் தாக்கங்களுக்கு நாங்கள் முகங்கொடுக்காமல் தப்பி ஓடமுடியாது. நாங்கள் பிரான்ஸிலிருந்துகொண்டு பிரஞ்சு மொழியைக் கற்கமாட்டோம், அந்த மொழியில் பேசமாட்டோம், பிரெஞ்சு அரசாங்க சட்டங்களை மதிக்கமாட்டோம், நாங்கள் தமிழர்கள். ஆதலால் இவையெல்லாம் எம்மைக் கட்டுப்படுத்தாது எனறு நாங்கள் கூறமுடியாது. ஆனால், நமது வீட்டை நாம் தமிழ் வீடாக, தமிழ்ப் பண்பாட்டை




வெளிப்படுத்தும் இடமாக வைத்திருக்க முடியும். இதையாரும் தடுக்கமுடியாது.

வீட்டிலே எல்லோரும் தமிழிலேயே பேசுவது - தமிழரின் அடையாளச் சின்னங்களை பளிச்சென்று பார்வையில் படும்படி வைத்திருப்பது - தமிழீழ தேசியக்கொடி, தேசியத் தலைவரின் படம் என்பவற்றை வரவேற்பறையில் வைப்பது - தாயக காட்சிப் படங்களை தொங்க விடுவது என்று பல்வேறு வழிகளில் தமிழ் வீட்டை நாம் உருவாக்கமுடியும். ஒரு மாற்று மொழி மாற்று கலாசாரச் சூழலில் கல்விக்கும் நமது குழந்தைகளுக்கு - வீட்டில் இவற்றை தினசரி பார்க்கும்போது ஒரு தேடல் ஏற்படும்.

நமது தாயகம் எது? நமது தேசியக் கொடியின் வரலாறு என்ன? நமது தேசியத் தலைவர் படைத்த சாதனைகள் என்ன? என்றெல்லாம் நமது பிள்ளைகள் மனதில் கேள்விகள் எழும். இந்தக் கேள்விக்குரிய விடைகளை அவர்கள் கண்டுபிடிப்பதற்குப் பெற்றோர்கள் வழிகாட்டிவிட்டால், நிச்சயமாக அவர்கள் நாட்டுப்பற்றுள்ள எதிர்கால சிந்தனையுள்ள குழந்தைகளாக வளர்வார்கள்.

பல பெற்றோர்கள் இதற்கான முயற்சிகளைச் செய்கின்றார்கள். குழந்தைகளுக்கு தாயக

## புலம்பெயர்ந்து தமிழர்கள் வாழும் பிரதேசங்களிலும் குழந்தைகளுக்கு தாயக உணர்வையூட்டி வளர்க்கவேண்டும்

உணர்வையூட்டி வளர்ப்பதற்குப் பல பெறரோர் தீவிரமுயற்சிகளை செய்தும் வருகின்றனர.

தாயக விடுதலைப் போராட்ட வரலாற்றையும், சிங்களப் பேரினவாத அரசுகளின் கொடுமைகளையும் பிள்ளைகள் புரிந்துகொள்ளும் விதத்தல் போதிப்பது, விடுமுறைக்கு பிள்ளைகளைத் தாயகத்துக்கு அழைத்து வந்து, இங்குள்ள நிலைமைகளை நேரில் காண்பிப்பது என்று பல முயற்சிகளை அவர்கள் மேற்கொள்கின்றனர்.

இந்த விடயத்தில் சுவீஸ் நாட்டில் புகலிடம் தேடிய தமிழர்கள் முன்னணியில் இருக்கிறார்கள். ஜேர்மனி - நோர்வே - டென்மார்க்- இத்தாலி ஆகிய நாடுகளிலும் இதற்கான முயற்சிகள் அதிகளவுக்கு எடுக்கப்படுகின்றன.

ஆனால், ஒட்டுமொத்தமான புலம்பெயர்ந்த தமிழர்களின் எண்ணிக்கையில் பார்த்தால், இந்த முயற்சிகளுக்கான விகிதாசாரம் என்பது குறைவு.

அதிகளவுக்குப் புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழும் - கனடா, பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற நாடுகளில் 80 முதல் 90 வீதமான பெற்றோர் இன்னமும் தாயகத்திலிருந்து தங்களது பிள்ளைகளை அந்நியப்படுத்தித்தான் வைத்திருக்கிறார்கள். இங்கே தாயகத்திலே பூச்சி இருக்கும், புழு இருக்கும், பாம்பு இருக்கும், பல்லி இருக்கும், சாப்பாட்டிலை 'ஈ' மொய்க்கும் என்று பிள்ளைகளைப் பயப்படுத்தும் பெற்றோர்கள்தான் நிறைய இருக்கிறார்களே தவிர, இங்குள்ள அவலங்கள், இங்கு நடந்த வீரம்செறிந்த போராட்டம், அதிலுள்ள அப்பழுக்கில்லாத தியாகம் இவை பற்றியெல்லாம் தங்கள் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுப்பவர்களில் எண்ணிக்கை குறைவு.

கடந்த கோடை விடுமுறைக்கும், குளிர் கால விடுமுறைக்கும் கொழும்புக்கு வந்து, பின்னர் அங்கிருந்து தங்கள் பூர்வீகச்சொத்துக்கள் இருக்கின்றதா என்பதை பார்த்துவிட்டுச் செல்வதற்காக விமானம்மூலம் யாழ்.குடா நாட்டுக்கு வந்த சில பெற்றோர் - இங்கை மனிசன் இருப்பானா, 'ஏசி' இல்லை, 'கொமட்' இல்லை என்று சலித்து விட்டுச்சென்றதை நேரில் காணக்கூடியதாக இருந்தது.

இதை ஒரு வகையான ஐரோப்பிய - அல்லது மேற்குலகச் செருக்கு என்று குறிப்பிடலாம்.

தமிழ் பெற்றோரில் இன்னொரு வகையினர் - நரியும் திராட்சைப் பழமும் கதையாக, முழுக்க முழுக்க மேற்குலக அல்லது புலம்பெயர்ந்த நாட்டு மொழி மற்றும் பண்பாட்டுக் கூறுகளை இழிவுபடுத்தி, தமிழ் மட்டும்தான் உயர்ந்தது, தமிழ் கலாசாரம் மட்டும்தான் அதிக உச்சமானது என்று பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுக்கும் போக்கை கையாண்டனர்.

நமது மொழி மற்றும் பண்பாட்டு - கலாசாரக் கூறுகளைப் பற்றிய உயர்வான எண்ணத்தை கொண்டிருப்பது தவறல்ல. என்றாலும், ஒப்பீட்டு அ்ளவில் இன்னொரு மொழி மற்றும் பண்பாட்டுத் தளத்தை முழுமையாக அறிந்து கொள்ளாமல், எழுந்தமானமாக அவற்றை நிராகரிப்பதும், இழிவு செய்வதும் ஏற்புடையதல்ல.

புலம்பெயர்ந்த தமிழர்களிடமிருந்த இந்தப் போக்கு, பெற்றோருக்கும் - பிள்ளைகளுக்கும் இடையிலான இடைவெளியை அதிகரிப்பதற்குக் காரணமாக அமைந்தது.

அதாவது, பிரெஞ்சு அல்லது டொச் (ஜேர்மனிய) மொழியில் கல்வி கற்கும் குழந்தைகளுக்கு - அந்த மொழிக்கும் அந்த மொழி பேசுபவர்களின் கலாசாரம் மற்றும் பண்பாட்டுக் கூறுகளும் கூடாதவை. அதைவிட தமிழ்மொழியும், தமிழ் கலாசாரமும்தான் உயர்ந்தது என்றும், பொதுப்படையாக கூறும்போதும் பிள்ளைகள் அதை ஒப்பீட்டளவில் பார்க்க தலைப்படுகின்றார்கள்.

பிரெஞ்சு அல்லது டொச் மொழியிலுள்ள வசதிகளையும், தமிழ்மொழியிலுள்ள வசதிகளையும் பற்றித் தங்களது தளத்தில் நின்று அவர்கள் பார்க்கின்றார்கள். தமிழ்மொழி அறிவியல் தளத்துக்கு வளர்ச்சியடையாததற்கான காரணங்கள் மற்றும் தடைகள் பற்றி அவர்களுக்குத் தெரியவில்லை.

ஒப்பீட்டளவில் - பிரொஞ்சும், டொச்சும், ஆங்கிலமும், டெனிஸ் (டென்மார்க்), நொஸ்க் (நோர்வே), டச் (ஹொலண்ட்) ஆகிய மொழிகளை கணினிகள் மற்றும் இணையத்தளங்களில் அதி உச்சமாகப் பயன்படுத்தும் அளவுக்குத் தமிழ்மொழியைப் பயன்படுத்த முடியாமல் உள்ளதை - அவர்கள் தமிழ் மொழியின் பலவீனமாகவே பார்க்கின்றார்கள்.

கலாசார பண்பாட்டு தளம் என்று வருகினற போது - தமிழ் பண்பாடு கலாசாரம் அதி உன்னதமானது என்று சொல்லிக்கொண்டு, அடுத்தவரை இழிவு செய்யும் சாதிக் கலாசாரத்தை - தமிழ் கலாசாரம் என்று பிள்ளைகளுக்கு திணிக்கும்போது, அவர்கள் ஐரோப்பிய கலாசாரத்தோடு அதை ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள்.

அவர்களைப் பொறுத்தவரை தமிழ் கலாசாரம் படுபிற்போக்குத்தனமானதாகவும், வளர்ச்சியடையாத ஒன்றாகவும் தெரியும். இது பெற்றோருக்கு ஒன்றும் தெரியாது என்ற உணர்வையும், அவர்கள் பொய் சொல்பவரகள் என்ற எண்ணத்தையும் பிள்ளைகளுக்கு உண்டாக்கி விடுகின்றது.

மிகச் சிறிய வயதில் ஏற்படுகின்ற இந்த எண்ணக்கருவானது - அவர்கள் மனதில் ஆளப்பதிந்து, அவர்களை அடையாளம் இழக்கச் செய்து விடுகின்றது. ♦

# உலக நோக்கு

# சூடானின் அரச சார்பான குழு மேற்கொண்ட மனித உரிமை மீறல் சம்பவங்களை ஐ.நாவின் குழு விசாரிக்கவுள்ளது!

சூடானின் நகரான டார்பூரில் அரசிற்குச் சார்பான குழுக்களினால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களை ஐக்கிய நாடுகள் சபையின் குழுவொன்று விசாரிக்கவுள்ளது. 10 நாட்களவரை விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளர் அனிக் ஸ்ரிவென்சன் தெரிவித்தார்.

அரசிற்குச் சார்பான அராபியக் குழுக்களினால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களின்போது எல்லைப் பிரதேசத்தில் அமைந்துள்ள சாட்டிற்குள் பிரவேசித்தவர்களையே விசாரிக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சூடானிய அரசாங்கம் அனுமதி வழங்கினால் விசாரணைகள் சூடானிலும் நடத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

சர்வதேச அவதானிகளின் முன்னிலையில் டார்பூர் பிரதேசத்தில் அமைந்துள்ள போராளிக்குழுக்களுக்கும், சூடானிய அரசிற்குமிடையே முதன்முறையாக நேருக்குநேரான பேச்சுக்கள் நடைபெற்றன.

சூடானின் போராளிக்குழுக்கள் சர்வதேச அவதானிகளின் அவதானிப்பினை வற்புறுத்தி வந்துள்ளனர். ஆனால், சூடானிய அரசாங்கம் உள்நாட்டுப் பிரச்சினையொன்று சர்வதேச மயப்படுவதனை விரும்பவில்லை.

டார்பூரில் கடந்த ஒரு வருடமாக உள்நாட்டுப்போர் தொடர்கின்றது. டார்பூர் பிரதேசத்தில் வாழும் சூடானிய கறுப்பின மக்களை அப்பிரதேசத்திலிருந்து அகற்றுவதற்காக அரசின் ஆதரவுடன் அராபியக் குழுவினர் மனித உரிமை மீறல்களை மேற்கொண்டுவருவதாக, ஐக்கிய நாடுகளின் அவசரகாலப் பணியகத்தின் இணைப்பாளர் ஜான் எயிலான்ட் தெரிவித்தார்.

பல ஆயிரத்திற்கும் அதிகமான கறுப்பின மக்கள் தமது இருப்பிடங்களிலிருந்து வெளியேறியுள்ளதாகவும், அண்டை நாடான சாட்டிற்குள் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் சென்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.




ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான அமைப்பு இம்மக்களை பாதுகாப்பான இருப்பிடங்களில் குடியமர்த்தும் பாரிய பணியினை மேற்கொண்டுள்ளது.

இதுவரை 22 ஆயிரம் அகதிகளை பாதுகாப்பான இருப்பிடங்களுக்கு மாற்றியுள்ளதாக ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான இணைப்பாளர் ஜவான் ஸ்ரும் தெரிவித்தார். மழைக்காலம் ஆரம்பித்தால் மண்பாதைகளுக்கூடாக இந்த மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றுவது கடினமான செயலென அவர் மேலும் தெரிவித்தார்.

## ஈரானிய அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்கள் வெற்றியளித்துள்ளன!

### அணு அமைப்பின் தலைவர் தெரிவிப்பு



(பாக்தாத்)

சர்வதேச அணுசக்தி அமைப்பின் தலைவர் மொகமட் எல்பறாடெய் - ஈரானிய அதிகாரிகளுடன் 5 மணித்தியாலங்கள்வரை மேற்கொண்ட பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்துள்ளதாகத் தெரிவித்தார்.

இதன்மூலம் ஈரானின் அணு ஆயுதங்கள் தொடர்பான திட்டங்களின் சந்தேகங்கள் தீர்ந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தமாத முடிவில் முக்கியமான முதற்கட்டத் தகவல்களை ஈரானின் அணுசக்தி அமைப்பின் தலைவர் வழங்குவதற்கு முன்வந்துள்ளதாகத் தெரிவித்தார்.

இதனால் ஐக்கிய நாடுகளின் அணுசக்தி பரிசோதகர்கள் குழுவொன்று விரைவில் ஈரான் செல்லவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதனிடையே ஏப்ரல் 9 ஆம் திகதியிலிருந்து யுரேனியம் பிரித்தெடுக்கும் திட்டங்களை நிறுத்தி, இப்பிரச்சினைக்கு முடிவுகாணவுள்ளதாக ஈரானின் அணுசக்தி அமைப்பின் தலைவர் அகசடா உறுதியளித்துள்ளார்.

## மட்றிட் குண்டுத் தாக்குதல் மற்றொரு சந்தேகநபர் கைது



ஸ்பெயினின் மட்றிட் ரயில் குண்டுத் தாக்குதல் தொடர்பாக மற்றுமொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மொரோக்கோவைப் பிறப்பிடமாகக்கொண்ட ஒருவரே நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதுவரை 26 பேர்வரை கைது செய்யப்பட்டுள்ளனர். 15 பேர்வரை குற்றவாளிகளாகக் காணப்பட்டுள்ளனர். மட்றிட் குண்டுத்தாக்குதலில சம்பந்தப்பட்டவர்களெனக் கருதப்படும் மற்றவர்களுக்கெதிராக சர்வதேச பிடியாணை பிறப்பிக்கப்பட்டதுடன் தேடுதல் பணிகளையும் பொலிஸார் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இதேவேளை பொலிஸாரின் சுற்றிவளைப்பின்போது குண்டுகளை வெடிக்கவைத்ததன் மூலம் தற்கொலை செய்தவர்களின் இருப்பிடத்தில் மேலும் சிதைந்த மனித உறுப்புக்கள் காணப்பட்டதாக தீவிரவாத தடுப்புப் பிரிவைச்சேர்ந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதன்மூலம் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நிகழ்த்தப்பட்ட இடத்தில் 6 பேர்வரை இறந்திருக்கலாமெனக் கருதப்படுகிறது.

மேலும் ஈராக், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளும் ஸ்பெயின் படைகள் திருப்பியழைக்கப்படாதுவிடின் இரத்தக்களரிகள் ஏற்படும் என தொலைநகல் மூலமான அச்சுறுத்தல் பத்திரிகை ஒன்றிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

இந்நகல் அராபிய மொழியில் கையெழுத்துப் பிரதியாக அனுப்பப்பட்டிருந்தது.

இந்நகலை ஸ்பெயின் பொலிஸார் ஆராய்ந்து வருகின்றனர்.

## தகவல்களை விற்றார் என்ற காரணத்தால்

# ரஷ்ய ஆய்வாளர் ஒருவருக்கு 15 ஆண்டுகள் சிறைத்தண்டனை!

ரஷ்ய நீதிமன்றம் ஆராட்சியாளர் ஒருவருக்கு 15 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துள்ளது. ரஷ்யாவின் தலைநகரில் அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளினால் கூட்டாக நிர்வகிக்கப்பட்ட ஆய்வு மையமொன்றில் கடமையாற்றிய ஆராட்சியாளர் இகோர் சுட்யசின் முக்கிய தகவல்களை கடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டே 15 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளார்.

நீர்மூழ்கிக் கப்பல் ஏவுகணைகளின் நடமாட்டம் தொடர்பாக எச்சரிக்கை செய்யும் தொழில்நுட்பத்தை பிரிட்டனுக்குத் தெரிவித்ததாக இவர்மீது குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

1999 ஆம் ஆண்டு இந்தக்குற்றம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டிருந்தவேளையில் இராணுவ கனரக தொழில்நுட்பத்தை பிரித்தானியாவில் அமைந்துள்ள நிறுவனமொன்றிக்குத் தெரிவித்ததை இவர் ஏற்றுக்கொண்டிருந்தார்.



அத்துடன் தன்னால் தெரிவிக்கப்பட்ட தகவல்கள் அமெரிக்காவின் புலனாய்வுத் துறைக்கு கடத்தப்படும் எனத் தான் கருதியிருக்கவில்லை எனவும் விசாரணையில் குறிப்பிட்டிருந்தார்.

ரஷ்யாவின் விஞ்ஞானிகளும், ஆராட்சியாளர்களும் தமக்குக் கிடைக்கும் குறைவான சம்பளத்தின் காரணமாக, வெளிநாடுகளில் அமைந்துள்ள ஆலோசனை நிறுவனங்களுக்குத் தகவல்களைத் தெரிவித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஈராக்கிலுள்ள தீவிரவாதத்தை அமெரிக்கப்படை அழிக்கவுள்ளது

## இராணுவ அதிகாரி தெரிவிப்பு



(பாக்தாத்)

ஈராக்கின் ஷியா முஸ்லிம் மதத்தலைவரின் பின்னணியில் இயங்கும் தீவிரவாத அமைப்பினை அழிக்கவுள்ளதாக அமெரிக்கப் படையினர் தெரிவித்தனர்.

ஷியா மதத்தலைவர் மொக்ரடா சவர் தலைமையில் இயங்கும் படைக்கெதிராக போர்நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக அமெரிக்க கூட்டுப்படையின் பேச்சாளர் மார்க் கிமிற் தெரிவித்திருக்கிறார்.

தலைநகர் பாக்தாத்தின் மேற்கு, தெற்கு பகுதிகளில் நடைபெற்ற வன்செயல்களில் 100 இற்கும் மேற்பட்ட ஈராக்கியர்களும், 20 கூட்டுப்படையினரும் கொல்லப்பட்டனர்.

இத்தாக்குதல் சம்பவங்களின் பின் ஈராக்கின் மத்திய, தென் பகுதிகளில் அமெரிக்க கூட்டுப் படையினரும், ஈராக்கிய படையினரும் 'மெகெடி படை' என அழைக்கப்படும் குழுவினை அழித்தொழிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக இராணுவ ஜெனரல் மார்க் கிமிற் பாக்தாத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்திருந்தார்.

அத்துடன் ஷியா மதத்தலைவர் சதார் - புனித நகர் நஜாப்பில் துப்பாக்கி ஏந்தியவர்களின் பாதுகாப்பில் வாழ்ந்து வருவதாக அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார்.

அத்துடன் ஷியா மதத் தலைவருக்கெதிரான போர் நடவடிக்கைகளை நிறுத்தவேண்டுமாயின், அவரது இருப்பிடத்துக்கு அருகில் அமைந்துள்ள பொலிஸ் நிலையத்தில் அவர் சரணடைய வேண்டுமெனவும் கிமிற் மேலும் தெரிவித்தார்.

ஷியா மதத்தலைவர் சதாரினால் நடாத்தப்பட்ட பத்திரிகையான அல் கவ்சா நிறுத்தப்பட்ட பின்னரே இவ் வன்முறைகள் ஆரம்பமானது குறிப்பிடத்தக்கது.

## நேபாளத்தில் வேலைநிறுத்தம்; இயல்புநிலை பெரும் பாதிப்பு



நேபாளத்தில் 2 ஆவது நாளாகத் தொடரும பொதுவேலைநிறுத்தம் காரணமாக இயல்பு வாழ்க்கை பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. உலகின் ஒரேயொரு மன்னர் இராச்சியமான நேபாளத்தில் - மன்னராட்சி அகற்றப்படவேண்டும் எனக்கோரி மாவோ போராளிகளினால் நடத்தப்படும் வேலைநிறுத்தங்களுக்கு மத்தியில், எதிர்க்கட்சியினர் மன்னர் 2002 ஆம ஆண்டிலிருந்து தன்னாட்சி நடத்திவருவதாக கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே பாடசாலைகள் தொழிற்சாலைகள் வணிக ஸ்தாபனங்கள் மூடப்பட்டும், வாகனப் போக்குவரத்தின்மையால் நகர் வெறிச்சோடிக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலைநிறுத்தங்களின் பின் இடையிடையே மாவோ தீவிரவாதிகளினால் மேற்கொளளப்படும் குண்டுத் தாக்குதல்களினால் மக்கள் வீடுகளினுள் முடக்கப்பட்டுள்ளதாகவும் பி.பி.சியின் 'சுனில் சர்மர்' காத்மண்டுவில் தெரிவித்தார்.

மாவோ போராளிகளினால் நடத்தப்படும் வேலைநிறுத்தங்களின் மத்தியில் - எதிர்க்கட்சியினரால் ஜனநாயக ஆட்சி மீட்கப்படவேண்டும் எனக்கோரி நடத்தப்படும் ஆர்ப்பாட்டப் பேரணிகளில் பல எதிர்க்கட்சித் தலைவர்கள் அரச படைகளின் தாக்குதல்களில் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## உதைபந்தாட்ட வன்செயல்களின்போது கைதானவர்களை துருக்கி விடுவிக்கவேண்டும்

### சர்வதேச மன்னிப்புச்சபை கோரிக்கை

உதைபந்தாட்ட ரசிகர்கள் மத்தியில் சென்ற மாதம் சிரியாவில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களில் குர்திஷ் இனத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்களை விடுதலை செய்யுமாறு சர்வதேச மண்ணிப்புச் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐந்து நாட்கள் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் 25 பேர்வரை இறந்தும், பலர் காயமடைந்திருந்தனர். சர்வதேச மன்னிப்புச்சபை சுதந்திரமான விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவித்திருந்தது.

இச்சம்பவத்தில் உதைபந்தாட்டக் குழு ஒன்றின் அராபிய குர்திஷ் ரசிகர்களிடையே ஏற்பட்ட மோதல்களில் இந்த உயிரிழப்பு நிகழ்ந்துள்ளது. இந்த மோதல்கள் துருக்கி -ஈராக் எல்லை நகரான குமெசிலியில் ஆரம்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# முப்பது வருட வரலாற்றில் நேர்மையாக நடந்த தேர்தல்

## உள்ளூர், வெளியூர் கண்காணிப்பாளர்கள்

கடந்த 30 வருட கால வரலாற்றில் சிறப்பாகவும், நேர்மையாகவும் நடைபெற்ற தேர்தலாக - நடந்து முடிந்துள்ள தேர்தலை குறிப்பிட முடியும் என, உள்ளூர் -வெளியூர் தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நடந்து முடிந்த தேர்தல் குறித்து தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட, உள்ளூர் - வெளியூர் கண்காணிப்பாளர்கள் தமது கருத்தை வெளியிட்டபோதே- இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் இது குறித்து மேலும் தெரிவிக்கையில் -

இலங்கையின் வடக்கு - கிழக்கு உட்பட அனைத்துப் பிரதேச மக்களும் 20 வருடகால இடைவெளிக்குப் பின்னர், யுத்தத்தின் அழுத்தத்திலிருந்து விடுபட்டு தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான உரிமையை நிலைநாட்டியுள்ளனர்.

அனைத்து அரசியல் கட்சிகளும் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கு மேற்கொண்ட முயற்சிகளின் பலனே இதுவாகும்.

பாதுகாப்பு அமைச்சையும், பொலிஸ் திணைக்களத்தையும் ஜனாதிபதி தேர்தல் காலத்தில் கையாண்ட விதம் சிறப்பானது.

ஒரு சில உத்தியோகத்தரின் நடவடிக்கையை தவிர, பெரும்பாலான பொலிஸ் உத்தியோகத்தர்களின் செயற்பாடுகள் வரவேற்கத்தக்கதாகவே இருந்தன. பொதுமக்கள் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொண்டதுடன் தமது ஜனநாயக உரிமையையும் பயன்படுத்தியுள்ளனர்.

தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காக கொடுத்த வாக்குறுதிகளை, காப்பாற்ற வேண்டிய பொறுப்பு புதிய அரசாங்கத்தினதும் அதன் உறுப்பினர்களதும் கைகளில் தங்கியுள்ளது எனவும் கண்காணிப்பாளர்கள் தெரிவித்தனர்.

இதே கருத்தையே பிரீடம் போர்ஸ் வோச் என்ற அமைப்பும் நேற்று வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# ஹக்கீம் – ராஜபக்ஷ நேற்று சந்தித்து பேச்சு!

புதிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமும் நேற்றும் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இந்தச் சந்திப்பில்- ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைவது குறித்தும், அதனூடாக பெறக்கூடிய அரசியல் நன்மைகள் குறித்தும் இருவரும் கலந்துரையாடியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஜப்பான் அரசு பாராட்டு!

இலங்கையின் புதிய பிரதமராகப் பதவியேற்றுள்ள மஹிந்த ராஜபக்ஷவை ஜப்பானிய அரசாங்கம் பாராட்டியுள்ளது.

அந்நாட்டின் பிரதமர் கொய்சுமி மஹிந்த ராஜபக்ஷவுக்கு பாராட்டுக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இத்தகவலைகொழும்பிலுள்ள இலங்கைக்கான ஜப்பானிய தூதரகம் நேற்று தெரிவித்துள்ளது.

# புதிய அரசாங்கம் விரைவில் புலிகளுடன் பேசவேண்டும்!

## வர்த்தக சம்மேளனம் வேண்டுகோள்

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் விரைவில் புதிய அரசாங்கம் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டுமென இலங்கை வர்த்தக சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

புதிய அரசாங்கம் இலங்கையின் ஆட்சியைப் பொறுப்பேற்றுள்ளமையையடுத்து இலங்கை வர்த்தக சம்மேளம் நேற்று இந்த வேண்டுகோளை அவர்களிடம் முன்வைத்துள்ளது.

அந்த வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

கடந்த ஆண்டுகளில் இடம்பெற்ற கொடுமையான யுத்தத்தால் இலங்கை மிக மோசமான பாதிப்புக்களை அனுபவித்து வந்துள்ளது. இதை உணர்ந்தே கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் சமாதான முயற்சிகளை முன்னெடுத்து வந்தது.

எனினும் எதிர்பாராது ஏற்பட்ட தேர்தலின்மூலம் புதிதாக அமைந்துள்ள அரசாங்கம் அதனைத் தொடர்வதுடன் வர்த்தக சம்மேளனத்திற்கு உரிய இடத்தினை வழங்கி வர்த்தகத்துறையை விருத்திசெய்துதருதல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### முக்கிய...

யப்பட்டு வருகின்றது.

இதேவேளை- 20 வருட கால உள்நாட்டுப் போருக்கு முடிவு காண்பதற்கா சமாதானப் பேச்சுக்கான பொறுப்பை ஜனாதிபதி சந்திரிகாவே பொறுப்பேற்றுக் கொள்ள விருப்பதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறியிருப்பதுடன் எதிர்காலத்தில் சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொள்ளும் குழுவுக்கு அமைச்சரவை ஆலோசனைகளை வழங்கும் எனவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

### புதிய பிரதமர்...

இந்த உரையிலேயே 'புதிய பிரதமராக நியமிக்கப்பட்டிருக்கும் ரணில் விக்கிரமசிங்க' என்று ஞாபக மறதியாகக் குறிப்பிட்டார்.

தனது கட்சியைச் சேர்ந்த மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்துவிட்டு ஜனாதிபதி இவ்வாறு மாறிக் குறிப்பிட்டமை பலரையும் ஆச்சரியப்படவைத்தது.

### இலங்கையின்....

வெற்றியில் ஜே.வி.பியின் பங்களிப்பு என்பது மிகவும் குறைந்தளவே. அததுடன் இந்த முன்னணி இந்தியாவுடன் உறவுகளைப் பலப்படுத்துவதற்கு மிகவும் ஆர்வமாக உள்ளது.

முன்னைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது இரண்டாண்டுகால ஆட்சியில் இந்திய - இலங்கை உறவை உறுதியான முறையில் முன்னேற்றியுள்ளார்.

இந்தியாவுடன் உறவை மேம்படுத்துவதற்கு இப்போது ஒரு பொற்காலத்தில் நாம் நிற்கின்றோம். இந்தியா வரலாற்று ரீதியாகவும், சட்டரீதியாகவும் எம்முடன் மாற்றமுடியாத தொடர்பை உள்ள நாடெனவும் அவர் தெரிவித்தார்.

### பெரும்பான்மைப் பலம் இல்லாமை...

மஹிந்த ராஜபக்ஷ வினதும் சந்திரிகாவினதும் தொடர்ச்சியான நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்காகவும், தனது ஆலோசர்களுடன் பேச்சுக்களை நடாத்துவதற்காக, தொணடமான் திடிரென இந்தியா புறப்பட்டுச் சென்றதாக செய்திகள் தெரிவித்தன.

இந்தியாவிற்குப் போகும்போது நிருபர்களிடம் பேசிய தொண்டமான், தமது கட்சியின் ஆதரவு யாருக்கு என்பது குறித்து எந்த முடிவும் எட்டப்படவில்லை என்றும், இதுவரை தமது கட்சி, யாருக்கும் ஆதரவு வழங்காது சுயேட்சையாகச் செயற்படுகின்ற முடிவுடனேயே இருப்பதாகவும் தெரிவித்தார் .

பின்னர் கருத்து வெளியிட்ட இலங்கைத் தொழிலாளர் கட்சியின் பேச்சாளர், கட்சியின் தலைவரான ஆறுமுகம் தொண்டமான், எதிர்வரும் 22ஆம் திகதிக்குப் பின்னரே நாடு திரும்பவுள்ளதாகத் தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ஷ உட்பட ஆளும் ஐ.ம.சு.முன்னணியினை இச்செய்தி கடும் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை புதிய அரசுக்கு ஆதரவளிப்பதற்கு இரண்டு தேசிய பட்டியல் ஆசனங்கள் தமக்கு வழங்க வேண்டும் என்று இ.தொ.கவும், 4 தேசியப்பட்டியல் ஆசனங்களை வழங்கவேண்டும் என முஸ்லிம் காங்கிரஸும் நிபந்தனை விதிருப்பதாகவும் செய்திகள் தெரிவித்தன.

போதிய பெரும்பான்மைபலத்தை நாடாளுமன்றத்தில் திரட்டிக் கொள்வதில் சிக்கலை எதிர்கொள்வதனாலேயே புதிய அமைச்சரவையை நியமிக்கும் நேற்றைய நிகழ்வு ஒத்திப் போடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

# புலிகளினது திட்டவரைபின் அடிப்படையில்...

கடந்த 35 ஆண்டுகளாக வடக்கு-கிழக்கில் தன்னாட்சி பெறுவதற்கு தமிழ் மக்கள் போராடி வந்துள்ளனர். ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் தமிழ் தேசியப் பிரச்சினைக்கு ஒரு நியாயமானதும் ஏற்றுக் கொள்ளக் கூடியதுமான ஒரு தீர்வை தர மறுத்ததன் காரணமாக முழுமையான இறைமையுடைய ஒரு சுதந்திர நாட்டுக்கான பிரகடனத்தைச் செய்ய தமிழ் மக்கள் தள்ளப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து, தமிழீழ விடுதலைப்புலிகளால் ஆரம்பிக்கப்பட்ட ஆயுதப் போராட்டம் கடந்த 20 ஆண்டு காலமாக, நடைபெற்றது. இதன் காரணமாக - அர்த்தமுள்ளதும், நம்பகத் தன்மையுள்ளதுமான பேச்சுவார்த்தைகள் மூலமாக, தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணலாம் என, இலங்கை அரசு ஏற்றுக் கொண்டது.

2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி ஏற்பட்ட யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து இலங்கை அரசுக்கும், தமிழ் மக்களின் உண்மையான ஏகோபித்த பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டது. 2003 ஆண்டு ஒக்டோபர் 31 ஆம் திகதி வட-கிழக்கிற்கு இடைக்கால சுயாட்சி அமைப்பை நிறுவுவதற்கான எழுத்து மூலமான திட்டவரைவு தமிழீழ விடுதலைப் புலிகளால் இலங்கை அரசிடம் முன்வைக்கப்பட்டது.

இலங்கை ஆட்சி அமைப்பில் 2003 நவம்பர் 4 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்ட பாரிய மாற்றங்களின் விளைவாக உருவாகிய அரசியலின் ஒரு நிலையற்ற தன்மை 2004 ஆம் ஆணடு ஏப்ரல் 2 ஆம் திகதி பொதுத் தேர்தலில் முடிவுற்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி வட - கிழக்கு பிராந்தியத்தில் போதிய ஆட்சி அதிகாரங்களுடன் ஒரு இடைக்கால தன்னாட்சி அமைப்பு விரைவில் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று ஒரு உறுதியான கொள்கையின் அடிப்படையில் தேர்தலை எதிர்நோக்கியது.

குடிபெயர்ந்திருக்கும் இலட்சக் கணக்கான தமிழ் மக்கள் தமது வதிவிடங்களில் மீள் குடியமர்த்தப்பட்டு புனர்வாழ்வு ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும், பேரழிவுக்குள்ளான வடக்கு - கிழக்கு பிராந்தியம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு, மீளக் கட்டியெழுப்பப்பட வேண்டுமென்றும், வடக்கு - கிழக்கில் வாழ்கின்ற மக்களுக்கு இயல்பு வாழ்க்கை ஏற்படுத்தப்பட வேண்டும் என்பவை மேற்கூறப்பட்ட கொள்கையில் முக்கிய அம்சங்களாக அமைந்தன.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டு, யுத்தம் நிறுத்தப்பட்டு இரண்டு வருடங்கள் முடிவடைந்த நிலையிலும் வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் வாழ்வில் இயல்பு நிலை இதுவரை எட்டவில்லை. மேற்குறிப்பிட்ட குறிக்கோளை அடைவதற்கு போதிய ஆட்சி அதிகாரங்களுடன் கூடிய, ஒரு இடைக்கால தன்னாட்சி அதிகார அமைப்பு இன்றியமையாதது.

கடந்த பொதுத் தேர்தலில் எதுவித ஐயத்துக்கும் இடமின்றி வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் எமக்கு அளித்த ஆணையின் அடிப்படையில் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும், வெளியேயும் விசேடமாக-சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் வடக்கு - கிழக்கில் விரைவில் ஒரு இடைக்கால தன்னாட்சி அதிகாரக் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படுவதற்கும் - மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் முழு மனதுடன் செயற்படுவோம்.

தமிழ் மக்களுடைய துயரங்களும், துன்பங்களும் தொடரமுடியாது என்று - அவற்றிற்கு உடனடி யாக ஒரு முடிவு காணப்படவேண்டும் என்றும் நாம் வலியுறுத்தி நிற்கின்றோம்.

இந்த நிலையில் - ஒரு சில ஊடகங்களில் ஊகத்தின் அடிப்படையில் வெளிவரும் சில பிழையான தகவல்களின் காரணமாக, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெயரில் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாம், தமிழ்பேசும் மக்கள் வரலாற்று ரீதியாக வாழ்ந்து வந்த வடக்கு - கிழக்கு பிராந்தியத்துக்கு சுயாட்சி வழங்கப்பட வேண்டுமென, கடந்த 50 வருடங்களுக்கு மேலாககோரி நின்ற அரசியல் வேட்கையை அடைவதற்கு எந்தவிதமான சந்தேகங்களுக்கு அப்பாலும், எந்தவிதமான மாற்றுக் கருத்துகளுக்கு இடமின்றியும் உழைப்பதற்கு உறுதி பூண்டுள்ளோம், என்பதைத் தெளிவு படுத்துகின்றோம்.

இதனாலேயே - நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் எவ்வித கேள்விகளுக்கும் இடமில்லாமல் எமது தமிழ் மக்கள் தீர்க்கமான முடிவாக வெளிப்படுத்தியுள்ளமையை உணர்ந்து அந்த அரசியல் அபிலாஷையை அடைவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்கு உறுதி பூண்டுள்ளோம்.

ஒரு இடைக்கால அல்லது இறுதித் தீர்வில் வடக்கு - கிழக்கில் வாழும் முஸ்லிம் சகோதரர்களின் அபிலாஷைகள், அவர்கள் திருப்தியடையக் கூடிய வகையில் தீர்க்கப்பட வேண்டும் என்பதிலும் வடக்கு-கிழக்கில் வாழ்கின்ற மக்கள் அனைவருக்கும் நீதி வழங்கப்பட வேண்டும் என்பதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் அக்கறை கொண்டுள்ளோம். என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (01)

### நிறைவேற்று...

முறைப்படுத்துவதில் அக்கறையுடன் செயற்படும். தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு, சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு இனப்பிரச்சினைக்கு சரியான தீர்வொன்றைப் பெற்றுக்கொடுக்க நாம் முயற்சிக்கவுள்ளோம்.

ஒழுக்கம்மிக்க சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கு, சட்டமும் ஒழுங்கும் வலுப்படுத்தப்படும். தற்போது நடைமுறையில் உள்ள நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை மாற்றியமைப்பதற்கு, யாப்பில் சில திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

ஜனநாயக ரீதியில் மக்கள் எம்மைத் தெரிவு செய்திருப்பது, எனது தேர்தல் அறிவிப்பு சரியானது என மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளமையை விளக்குவதாக உள்ளது.

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தல் ஜனநாயக முறைப்படி நடப்பதற்கு உதவிய அனைத்துத் தரப்பினருக்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1604 திகதி: 06.04.2004

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| S | 7 | 7 | 9 | 2 | 9 | 0 |

தனிஸ் பல்சுவையகம்
மீண்டும் யாழ் நகரில் பதினைந்து வருட இடைவெளிக்குப் பின்
நாவலர் வீதி ஐந்து சந்தியில் தனிஸ் பல்சுவையகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
நீங்கள் சுவைத்துப் பாருங்கள்...புரியாணி, மதிய உணவு, மாலை - கொத்துரொட்டி, பிட்டு, இடியப்பம், சுவையூட்டும் கறிவகைகள் அனைத்திற்கும் தனிஸ் பல்சுவையகம்.
உங்கள் வீட்டில் விசேட நிகழ்வுகளுக்கு கேக் வகைகள் ஓடர் பண்ணி பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்.
3/20 நாவலர் வீதி, ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.
T.P - 6321132
(709)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 08.04.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.